விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 28 சனிக்கிழமை (13.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 206

இராணுவத்தின் ஒத்துழைப்புடன்

## நாவற்குழியில் அமைக்கப்பட்ட விகாரை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவற்குழிப் பிரதேசத்தில் இலங்கைத் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அனுமதியுடன் இராணுவத்தின் ஒத்துழைப்போடு புதிதாக அமைக்கப்பட்ட விகாரை இன்று 13ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

நாவற்குழி சம்புத்தி சுமன விகாரைத் திறப்பு விழா எனப் பெயரிடப்பட்ட அழைப்பிதழ் கொழும்பில் உள்ள பிரமுகர்களுக்கு அதிகாரபூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 23

## எனக்கு தெரிந்த விடயங்களை தெரிவுக்குழுவில் தெரிவிப்பேன்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக விசாரணை செய்யும் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தான் அழைக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவுக்குழு முன்னிலையில் தான் ஆஜராவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தை கூறியுள்ளார். 23

அமெரிக்காவுடனான பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பில்

# இலங்கை அரசு மீது இந்தியா அதிக அவதானம்

## எக்கனமிக் டைம்ஸ் செய்தி வெளியீடு

(கொழும்பு)

அமெரிக்காவுடன் இலங்கை ஏற்படுத்திக்கொள்ளவிருப்பதாக கூறப்படும் பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாக இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாக எக்கனமிக் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

போலி நாணயத்தாள்

## யாழில் மூவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் போலி நாணயத்தாள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கெற்பேலி கிளாலியைச் சேர்ந்த 23

## கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு துரோகமிழைக்கின்றது

### செஹான் சேமசிங்க

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு துரோகமிழைக்கின்றது என மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க 23

23ஆம் திகதி வரை

## பாராளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

போதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை இல்லா 24

## பூஜித மற்றும் ஹேமசிறி சார்பில் நீதிமன்றில் முன்னிலையாவதில்லை

### சட்டமா அதிபர் அறிவிப்பு; வழக்கும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் பதவி விலகிய முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது.

7 பேர் கொண்ட பூரண நீதியரசர்கள் ஆயத்தினால் இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு 23

சிறுபான்மை கட்சிகளின் பங்களிப்பே

## பிரேரணை வெற்றிக்கு முக்கிய காரணி - விஜயகலா



(கொழும்பு)

அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் அவர்களது முயற்சியை நாங்கள் தோற்கடித்திருகிறோம் என விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த வெற்றியில் ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மையினக் கட்சிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். 23

## சஹ்ரானுடன் பயிற்சி பெற்ற

### மேலும் ஒருவர் கைது

(கொழும்பு)

இலங்கையில் ஈஸ்டர் தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான சஹ் 24

## தமிழ் மக்களின் ஆதரவினாலேயே அரசியலை தொடர முடிந்தது

### அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களின் வாக்குகளாலேயே நான் இத்தனை வருட காலம் பாராளுமன்றத்திற்குத் தேர்வாகி சேவையாற்றிக் கொண்டிருக்கிறேன். அந்தவகையில்தமிழ்மக்கள் மீதான எனது கௌரவத்தை வெளிப்படுத்துவதுடன், நாமனை 23

## சிகரட் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

வரி அதிகரிப்பின் காரணமாக, பலவகையான சிகரட்டுகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மதுசார தகவல் மையம் இதனைத் தெரிவித்துள்ளது. 24

## 6 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் நெடுந்தீவுக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றையதினம் கைது செய்யப்பட்ட அவர்கள், ராமநாதபுரம் - நம்புத்தலை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அவர்கள் காங்கேசன் துறை கடற்தொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள 23

ஒரு இலட்சத்து 93 ஆயிரம் பேர்

## கடும் வறட்சி காரணமாக வட மாகாணத்தில் பாதிப்பு

(கொழும்பு)

கடும் வறட்சி காரணமாக வட மாகாணத்தில் ஒரு இலட்சத்து 93 ஆயிரத்து 573 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி நேற்று வெள்ளிக்கிழமை இதனைத் தெரிவித்துள்ளார். 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# YAMAHA

## வழங்கும் சிறப்பு சலுகை

52,000/= வரை விலைக்கழிவு



முற்கொடுப்பனவாக வெறும் 39,500.00 மாத்திரமே செலுத்தி யமஹா ஸ்கூட்டர் ஒன்றினை இன்றே கொண்டு செல்லுங்கள்
(இச்சலுகை குறித்த கையிருப்புகளுக்கு மட்டுமே)

உங்கள் பழைய மோட்டார் சைக்கிளை கொடுத்து புதியமோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொள்ளலாம்

**இன்றும் நாளையும் மாத்திரம்**

(வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாளையும்)

மருதனார் மடம் சந்தி, சுன்னாகம்.

**எமது காட்சியறை : - Digital Electornics**
**62/16, Stanley Road, Jaffna.**
**0776623824 / 0212224040**


# ரிஷாத்துக்கெதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளன

## எஸ்.பி.திஸாநாயக்க

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மீது முன்வைக்கப்பட்டுள்ள பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான சகல ஆதாரமும் எங்களிடம் உள்ளது. அந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட பொலிஸ் மா அதிபர், குற்றப்புலனாய்வு பிரிவினர், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு உள்ளிட்டோருக்கு அனுப்பி வைக்கவுள்ளதாகவும் இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தகுந்த விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் உயர் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்போவதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3)


## கடை விற்பனைக்கு

முல்லைத்தீவு நகரின் மத்தியில் 03 மாடிகொண்ட 3300 சதுர அடியுடைய நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடம் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு :
**077 287 0223**

(C-6939)


## காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலய ஆடி திருக்குளிர்த்தி மஹா சங்காபிஷேகம் தொடர்பான அறிவித்தல்

காரைநகர் இலங்கை வங்கியின் சேமிப்பு கணக்கிலக்கம் 7642323இற்கு அடியவர்கள் எவரும் ஆடி திருக்குளிர்த்தி மஹாசங்காபிஷேக உற்சவத்திற்கு பணவைப்பு செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

**பெறுநர்குழு** (C-6955)
**மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலயம், காரைநகர்.**

## ஏழாலை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க நூற்றாண்டு விழா

### விசேட பொதுக்கூட்டம்


மேற்படி கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் **14.07.2019** நடைபெறமாட்டாது. அவ்விசேட கூட்டம் **21.07.2019** ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

அனைத்து பழைய மாணவர்களும் கலந்து கொள்ளவும்.

பழைய மாணவர் சங்கம்
ஏழாலை ம.வி

(இ)

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1950 - 10 - 22

உதிர்வு 2019 - 06 - 13

அன்பால் அனைவரையும் அரவணைத்தீர்கள்
புன்னகையால் அனைவரையும் கவர்ந்தீர்கள்
பாசத்தோடு எம்மை வளர்த்தீர்கள்
என்றும் எம் இதயங்களில் வாழ்வீர்கள்

### அமரர் கிருஷ்ணர் தங்கராஜா

கடந்த 13.06.2019 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பக் குலவிளக்கின் 31ம் நாள் நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 13.07.2019 இன்று சனிக்கிழமை நடைபெறும். அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

தொட்டிலடி,
சங்கானை.

(C-6953)

தகவல்
குடும்பத்தினர்


# ஆளணி தேவை

## ஆர்கலி தனியார் வைத்தியசாலை

வட மாகாணத்தின் அதிவிசேட சேவைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா நகரின் புதிய வடிவம்

- ஓய்வுபெற்ற மருத்துவர்கள், சிறந்த அனுபவமுள்ள பயிற்சி மருத்துவர்கள்
- தகுதியான தாதிய உத்தியோகத்தர்கள்
- மெடிக்கல் றெப்ஸ், அனுபவமுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
- பார்மசிஸ்ற் (மருந்தாளர்கள்)
- வெளிநாட்டில் அல்லது சொகுசு Hotels இல் வேலை செய்த அனுபவமுள்ள சுத்திகரிப்பு தொழிலாளர்கள்

(C-6958)



ஆர்கலி தனியார் வைத்தியசாலை
சுற்றுவட்ட வீதி, குடியிருப்பு,
வவுனியா.

தொடர்புகளுக்கு:
076 665 8562

# வாக்குகளுக்காக இனவாதத்தை தூண்டவேண்டாம்



## அப்துல்லா மஹ்ரூப் கோரிக்கை

(கொழும்பு)

**வாக்குகளுக்காக இனவாதத்தை தூண்டி, இன நல்லுறவை சீர்குலைக்க வேண்டாம் என நாடளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் அவ் அறிக்கையில் குறிப்பிடுகையில்,

சிலர் உயர்ந்த சபையில் இனவாத பேச்சுக்களை பேசி, இனவாதத்தை கக்கும் சக தமிழ் பேசும் உறுப்பினர்கள் காணப்படுகிறார்கள்.

சஹ்ரானின் பெயரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் இருப்பதாகவும் அவருக்கு தலைவர் இருப்பதாகவும் கூறும் இவ்வாறான உறுப்பினர் இதை அரசின் பாதுகாப்பு பிரிவுக்கு சொல்ல வேண்டும்.

நாடாளுமன்றில் அமைக்கப்பட்ட தெரிவுக்குழுவின் முன் சொல்ல வேண்டும். மாறாக இனவாத பேச்சுக்களை பேசி, இன நல்லுறவை சீர் குலைத்து வாக்குகளை பெற முயற்சிக்காதீர்கள். இதனால், நாட்டில் சட்ட திட்டங்கள் புலனாய்வு பிரிவு என்பன கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

சஹ்ரான் இஸ்லாமிய அடிப்படைவாதியல்ல. முஸ்லிம்கள் இந்நாட்டில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக நாட்டின் அரசியல் சட்ட, திட்டங்களுக்கும் ஆட்சிக்கும் இணைந்து செயற்பட்டவர்கள். முஸ்லிம்களிடத்தில் பயங்கரவாதம் இல்லை. அப்படி இருந்தால் காட்டிக் கொடுங்கள்.

நாடாளுமன்றத்தில் இப்படி இனவாத பேச்சுக்களை பேசும் க.கோடீஸ்வரன் போன்றோர் இதனால் மக்களின் வாக்குகளை பெற முடியாது.

22 இலட்சம் முஸ்லிம்களும் சஹ்ரான் பயங்கரவாதி எனக் கூறியபோதும் அவனுக்கு தலைவர் இருப்பதாக கூறுவது வெறும் இன, மதவாதத்தை தூண்டும் செயலாகும். இவ்வாறான பேச்சுகளை பேசி முஸ்லிம்களின் மனதை புண்படுத்தாதீர்கள் என அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-9)

# தெரிவுக்குழு முன்னிலையில் பிரதமர் சாட்சியம்

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாதத் தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் நாடாளுமன்ற தெரிவு குழுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சாட்சியமளிக்கவுள்ளார் என அமைச்சரும் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தற்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன மற்றும் முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரையும் தெரிவுக்குழுவிற்கு அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவுக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளிப்பார் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்க்ரவாதத் தாக்குதல் இடம்பெற்ற போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் இல்லாத காரணத்தால், பிரதமர் அரசாங்கத்திற்கு தலைமை தாங்கினார் என்பதன் அடிப்படையிலேயே அவரை தெரிவுக்குழுவுக்கு அழைக்க தீர்மானிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதத்திற்கு பின்னர் பாதுகாப்பு சபையினை கூட்டுவதில் காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அதில் பங்கேற்பதில் இருந்த நெருக்கடிகள் குறித்து பிரதமர் இதன்போது சாட்சியமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (7-9)

# மரண தண்டனைக்கு எதிரான யோசனை பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மரண தண்டனையை இல்லாமல் செய்வது சம்பந்தமான யோசனை ஒன்று நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொடவினால் இந்த யோசனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று காலை 11.30 மணியளவில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-9)

# பதவிகளை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி கோரினார் - பைசல்



(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகிய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்தார்.

கொழும்பில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் கூறினார்.

பதவிகளை இராஜினாமா செய்யத் தீர்மானித்தது மக்களின் பாதுகாப்புக்காகவே என்றும், தற்போது ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று பெரும்பாலும் உறுதியாகியுள்ளது.

இது சம்பந்தமாக ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி தெரிவித்தார். எனவே ரிஷாத் பதியுதீனும் மீண்டும் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றுக் கொள்வார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

# வலி. வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த 27.5 ஏக்கர் காணி நேற்று விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் பாதுகாப்பு படைகளின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளில் 27.5 ஏக்கர் காணிகள் பொதுமக்களுக்கு மீண்டும் கையளிக்கும் நிகழ்வு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நேற்று தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.



யுத்தகாலத்தில் பாதுகாப்பு படையினரால் கையகப்படுத்தப்பட்ட பொதுமக்களின் காணிகள் படிப்படியாக பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியினால மேற்குறித்த காணிகள் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டதுடன் ஆளுநர் அதனை யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் முரளிதரனிடம் வழங்கினார்.

இதில் தையிட்டி வடக்கு மற்றும் தெற்குப்பகுதிகளில் உள்ள 26.5 ஏக்கர் காணியும் பலாலி தமிழ்கலவன் பாடசாலையில் ஒரு ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம்ஆண்டுமுதல்இன்றுவரை யாழ்.மாவட்டத்தில் பாதுகாப்பு படைகளின் வசமிருந்த காணிகளில் 2963 ஏக்கர் காணிகள் பொதுமக்களிடம் மீண்டும் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பல காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படவுள்ளமையை குறிப்பிட்ட ஆளுநர் அதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (9-10)

## தீக்காயங்களுடன் கணவன்- மனைவி மீட்பு

(குருமன்காடு)

வவுனியா பொதுமண்டப வீதிமுதலாம்ஒழுங்கையில்அமைந்துள்ள வீடொன்றிலிருந்து தீக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கணவன்-மனைவி மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம்நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறித்த வீட்டில் கதறல் சத்தம் கேட்டதையடுத்து அயலவர்கள் வீட்டின் கதவினையுடைத்துக் கொண்டு உள்ளே சென்றுள்ளனர். அங்கு கணவன்-மனைவி தீப்பற்றிய நிலையில் காணப்பட்டுள்ளனர். உடனடியாக அயலவர்கள்இருவரையும்மீட்டெடுத்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பொலிஸ் காவலரண் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-250)

# ரிஷாத்துக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு அமைச்சுப் பதவி வழங்கினால், மீண்டும் ஒரு முறை அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரவுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் பதவிகளை பொறுப்பேற்க எடுத்த தீர்மானம் குறித்து கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7-9)




விம்பிள்டன் டென்னிஸ்

# சாதிப்பாரா செரினா!


செரினா

விம்பிள்டன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் இறுதியில் அமெரிக்காவின் செரினா, ருமேனியாவின் ஹலெப் மோதுகின்றனர். இதில் செரினா வெற்றி பெறும் பட்சத்தில், 24வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று சாதிக்கலாம்.

இங்கிலாந்தின் லண்டனில், நடப்பு ஆண்டின் 3வது கிராண்ட்ஸ்லாம் தொடரான விம்பிள்டன் டென்னிஸ் நடக்கிறது. இன்று நடக்கவுள்ள பெண் கள் ஒற்றையர் பிரிவு இறுதியில், உலகின் 'நம்பர் 7' ருமேனியாவின் சிமோனா ஹலெப், 10வது இடத்தில் உள்ள அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் மோதுகின்றனர்.

டபிள்யு.டி.ஏ., ஒற்றையர் பிரிவு அரங்கில் இவர்கள் இருவரும் 10 முறை மோதியுள்ளனர். இதில் செரினா 9, ஹாலெப் ஒரு போட்டியில் வென்றனர். கடைசியாக இந்த ஆண்டு மெல்போர்னில் நடந்த அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் தொடருக்கான 'ரவுண்ட்16' போட்டியில் செரினா, 6-1, 4-6, 6-4 என, ஹலெப்பை வீழ்த்தினார்.

தவிர, கடந்த ஆண்டு விம்பிள்டனில் கிண்ணம் வென்ற ஜேர்மனியின் கெர்பர், யு.எஸ்., ஓபனில் பட்டம் வென்ற ஜப்பானின் நவோமி ஒசாகா உள்ளிட்டோர் தோல்வியடைந்து வெளியேறியதால், செரினாவுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

இன்றைய இறுதிப் போட்டியில் செரினா வெற்றி பெறும் பட்சத்தில், தனது 24வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை ருசிக்கலாம்.

இதன்மூலம் ஒற்றையர் பிரிவில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வீராங்கனைகள் பட்டியலில் முதலிடத்தை அவுஸ்திரேலியாவின் மார்கரட் கோர்ட் (24 பட்டம்) உடன் பகிர்ந்து கொள்ளலாம். தவிர இது, விம்பிள்டனில் செரினாவின் 8வது பட்டமாக அமையும்.

செரினா, இதுவரை அவுஸ்திரேலிய ஓபனில் 7 (2003, 2005, 2007, 2009, 2010, 2015, 2017), பிரெஞ்ச் ஓபனில் 3 (2002, 2013, 2015), விம்பிள்ட னில் 7 (2002, 2003, 2009, 2010, 2012, 2015, 2016), யு.எஸ்., ஓபனில் 6 (1999, 2002, 2008, 2012, 2013, 2014) முறை கிண்ணம் வென்றுள்ளார்.

ஒருவேளை சிமோனா ஹலெப் வென்றால், இது இவரது 2வது கிராண்ட்ஸ்லாம் மற்றும் முதலாவது விம்பிள்டன் பட்டமாக அமையும். இவர், இதுவரை பிரெஞ்ச் ஓபனில் மட்டும் ஒரு முறை (2018) கிண்ணம் வென்றுள்ளார்.

# ஜோகோவிச் 'ஜோர்'

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் இறுதிக்கு ஜோகோவிச் முன்னேறினார்.

இங்கிலாந்தில் உள்ள லண்டன் நகரில், நடப்பு ஆண்டின் 3வது கிராண்ட்ஸ்லாம் தொடரான விம்பிள்டன் டென்னிஸ் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் உலகின் 'நம்பர் 1' வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 22வது இடத்தில் உள்ள ஸ்பெயினின் ரொபர்டோ பாடிஸ்டா அகுட் மோதினர்.

முதல் செட்டை ஜோகோவிச் 6-2 எனக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட பாடிஸ்டா அகுட், 2வது செட்டை 6-4 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். உடனடியாக சுதாகரித்துக் கொண்ட ஜோகோவிச், அடுத்த இரண்டு செட்களை 6-3, 6-2 என வென்றார்.

இரண்டு மணி நேரம், 48 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய ஜோகோவிச் 6-2, 4-6, 6-3, 6-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று 6வது முறையாக இறுதிக்குள் நுழைந்தார். முன்னதாக விளையாடிய 5 இறுதிப் போட்டியில், 4ல் (2011, 2014, 2015, 2018) வெற்றி பெற்று கிண்ணம் வென்றார். ஒரு முறை (2013) தோல்வியடைந்து 2வது இடம் பிடித்தார்.


வெற்றியின் களிப்பில் ஜோகோவிச்

## பிளே ஓப் வருமா?

'உலக கிண்ண நொக்அவுட் சுற்றில் ஐ.பி.எல்., போல 'பிளே ஓப்' விதிகளை கொண்டு வருவது குறித்து ஐ.சி.சி., பரிசீலிக்க வேண்டும்,' என்ற கருத்துக்கு இந்திய அணித் தலைவர் ஹோலி ஆதரவு தெரிவித்தார்.

இங்கிலாந்தில் உலக கிண்ணத் தொடர் நடக்கிறது. லீக் சுற்று முடிவில் இந்திய அணி 15 புள்ளி களுடன் முதலிடம் பிடித்தது. 11 புள்ளியுடன் நான்காவது இடம் பிடித்த நியூசிலாந்தை அரையிறுதியில் எதிர் கொண்டது.

இதில் இந்திய அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்க, உலக கிண்ண வாய்ப்பை இழந்தது. பத்திரிகையாளர் சந்திப்பில், 'அரையிறுதிக்குப் பதில் ஐ.பி.எல்., போல 'பிளே ஓப்' முறையை கொண்டு வரலாமா என கேட்கப்பட்டது.

இதுகுறித்து இந்திய அணித் தலைவர் ஹோலி கூறுகையில், "எதிர்காலத்தில் என்ன நடக்கும் என யாருக்குத் தெரியும். 'பிளே ஓப்' முறையிலான அரையிறுதி குறித்து விவாதிக்கப்பட வேண்டும். இது உலக கிண்ண போன்ற தொடருக்கு இன்னும் விறுவிறுப்பை அதிகரிக்கும். ஆனால் இது எப்போது நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என நமக்குத் தெரியாது. ஜடேஜாவை கடந்த 10 ஆண்டுகளாக பார்த்து



வருகிறேன். இவருடன் இணைந்து விளையாடி வருகிறேன். என்னைப் பொறுத்த வரையில் அரையிறுதியில் இவர் எடுத்த 77 ஓட்டங்கள் தான் சிறந்ததாக இருக்கும் என நினைக்கிறேன்' என்றார் ஹோலி

# என்னைச் சொல்லி குற்றமில்லை

## டி வில்லியர்ஸ் 'விளாசல்'


ஏபி டி வில்லியர்ஸ்

"உலக கிண்ண அணியில் இடம் பிடிக்க, தென்னாபிரிக்க அணி நிர்வாகத்தை தொடர்பு கொள்ளவில்லை. இந்த விடயத்தில் சுயநலவாதி, பணம் மீது ஆசை கொண்டவன் என தேவை இல்லாமல் விமர்சிக்கப்பட்டேன்," என, தென்னாபிரிக்க முன்னாள் வீரர் டி வில்லியர்ஸ் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க முன்னாள் வீரர் டி வில்லியர்ஸ், (வயது-35) நாலாபுறமும் விளாசும் திறமை கொண்ட இவர், 'மிஸ்டர் 360' என ரசிகர்களால் அழைக்கப்படு கிறார்.

கடந்த ஆண்டு மே மாதம் சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வு பெற்றார். இங்கிலாந்தில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடருக்காக, ஓய்வு முடிவை கைவிட்டு, அணிக்கு திரும்ப டி வில்லியர்ஸ் விருப்பம் தெரிவித்ததாக தெரிவிக்கப்பட்டது. அணி நிர்வாகம் இதை ஏற்கவில்லை என கூறப்பட்டது. உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்கா 9 போட்டிகளில் 3 வெற்றி மட்டும் பெற்று லீக் சுற்று டன் திரும்பியது.

இது குறித்து டி வில்லியர்ஸ் கூறியதாவது, உலக கிண்ணத் தொடரில் பங்கேற்க நான் விருப்பம் தெரிவிக்கவில்லை. எனக்கு அணியில் இடம் தர யாருக்கும் நெருக்கடி தரவில்லை. இதனால், அநீதி இழைக்கப்பட்ட தாக கூறுவதை ஏற்க முடியாது. ஓய்வுபெற்ற பல நாட்களுக்குப்பின்பும் கூட, அணி நிர்வாகம் என்னை தொடர்புகொள்ள வில்லை. ஒருவேளை, உலக கிண்ணத் தொடரில் விளையாட கேட்டிருந்தால் நிச்சயமாக ஏற்றுக் கொண்டிருப்பேன்.

**டு பிளசி எப்படி?**

பள்ளிப் பருவத்தில் இருந்தே, நானும் அணித் தலைவர் டு பிளசியும் நண்பர்கள். உலகக் கிண்ணத் தொடருக்கான அணி அறிவிக்கப்படும் முன், இவரிடம் பேசினேன். அப்போது, ஐ.பி.எல்., தொடரில் பெங்களூரு அணிக்காக சிறப்பாக விளையாடி கொண்டிருந்தேன். அணிக்கு நான் தேவைப்பட்டால் நிச்சயமாக விளையாடுவேன் என தெரிவித்தேன். இது எங்கள் இருவருக்கும் இடையே நடந்த உரையாடல். உலகக் கிண்ணத் தொடரில் அடுத்தடுத்து வீழ்ந்தபின், நாங்கள் பேசியது கசிந் தது. நானோ, டு பிளசியோ இதை வெளிப்படுத்தவில்லை. என்றார்.

**காரணம் என்ன?**

என்னை குறை கூற வேண்டும் என்ற எண்ணத்தில் யாரோ செய்துவிட்டனர். என்னை சுயநலவாதி, அகங்காரம் பிடித்தவன் என விமர்சனம் செய்தனர். பணத்தின் மீது எனக்கு ஆசை என விமர்சித்தனர். நான் ஓய்வு பெற்ற தன் நோக்கம், குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவழிக்க மட்டுமே. உலகம் முழுவதும் பல்வேறு தொடர்களில் விளையாட அழைப்பு வருகிறது. குடும்பத்தினருடன் செலவழிக்கும் நேரம் குறையும் என்பதால் செல்வது இல்லை. இவ்வாறு டி வில்லியர்ஸ் கூறினார்.

**பணிப்பெண் தேவை**

மூன்று பேர் உள்ள வீட்டில்
சமையல் மற்றும் இதர வீட்டு
வேலைகளைத் தங்கி நின்று
செய்யக்கூடிய 50 வயதிற்குட்பட்ட
பணிப்பெண் தேவை
வாராந்த / மாதாந்த விடுமுறையுடன்
உணவு, தங்குமிடம் தரப்படும்,
சம்பளம் வேலைக்கேற்ப
நேரில் தீர்மானிக்கலாம்.
இடம்: வடமராட்சி - கரவெட்டி
பணிபுரிய விரும்புவோர் நேரடியாக
தொடர்பு கொள்ளவும்

**076 484 71 71**

# உன் இனத்துக்காய் போராடுகிறாய் உனை வீழ்த்த விடமாட்டேன்

## நம்பிக்கை தந்த சம்பந்தன்–றிசாத் பதியுதீன்

உன் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தால் உன் சிறுபான்மை இனத்துக்காக உன்னை விழ்த்த விடமாட்டேன் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனக்கு நம்பிக்கை அளித்ததாக முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் உயிர்த்த ஞாயிறுத் தினத்தில் இடம்பெற்ற மிக மோசமான தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் என்னையும் என் முஸ்லிம் சமூகத்தையும் தொடர்புபடுத்தி என்னை அரசியலில் இருந்து ஓரங்கட்ட ஒரு பகுதியினர் திட்டங்கள் தீட்டினர்.

இவ்வாறான சூழ்நிலையில் என் மீது பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதன் மூலம் என் அரசியல் வாழ்வுக்கு முடிவுகட்ட நினைத்ததோடு என் மக்களை பொருளாதார ரீதியாக அடிமைகளாக்க நினைத்தார்கள்.



அவ்வாறான சூழ்நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவைச் சந்திப்பதற்காகச் சென்றேன்.

அச் சந்திப்பின் போது தலைவர் சம்பந்தன் ஐயா நீ உன் இனத்துக்காகப் போராடுகிறாய். நாங்கள் இருவரும் ஒரு மொழி பேசுகிறவர்கள். இலங்கையில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் உனக்கு எவ்வித தொடர்பு இல்லை என்பதை நான் அறிவேன். ஆகையால் உன் சமூகத்தையோ சமூகத்துக்காக போராடும் உன்னையோ வீழ்த்துவதற்கு நான் விடமாட்டேன் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தன்னிடம் தெரிவித்தார் என பாராளுமன்றில் முன்னாள் அமைச்சர் றிசாத் தெரிவித்தார். (5-10)


# மரண அறிவித்தல்

## அமரர் பேரம்பலம் சரஸ்வதி

பிறப்பு 08 . 03 . 1954



இறப்பு 07 . 07 . 2019

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் இல. 528, பொன்னகரை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் சரஸ்வதி 07.07.2019 அன்று இறைபதம் அடைந்தார்.

இவர் பேரம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான ஐயம்பிள்ளை- வள்ளியம்மையின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் விஜயதர்சினி, நர்மதா (அவுஸ்திரேலியா), கஜந்தன், லாவண்யா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கோவிந்தராசா, முரளிதரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஞ்சயன், சாரலன், காருண்யா, விசால் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.07.2019 ஞாயிறு காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

528, பொன்னகர்,
நட்டாங்கண்டல்.

(C-6951)

தகவல்: குடும்பத்தினர்.
077 450 3828

# 4ம் ஆண்டு நினைவு நாள்

## அமரர் தயாநிதி கஜேந்திரன் (ராஜா)



அன்னை மடியில் 30.08.1985

அம்பிகை அடியில் 13.07.2015

ஆண்டுகள் நான்கு கடந்தாலும் அவனியில்
உன்னை மறப்பதுண்டோ!
ராஜா என அழைத்த எங்கள் தெய்வமே
ஆறாது என்றும் உன் நினைவுகள் .

(9567)

திதி வெண்பா

ஆண்டு மன்மத ஆனி மாத திங்கள் அன்று காண்தகு
அமரபக்க திரயோதசி திதி தன்னில் கஜேந்திரன் சென்றனன்
விண்ணுலகம் எமை மீளாத்துயரில் ஆழ்த்தி.

"இந்திரப் பிரஸ்தம்"
கொக்குவில் மேற்கு, கொக்குவில். குடும்பத்தினர்.


## இராசி பலன்

**மீனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

**மேடம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், உடல்நலனில் கவனம் தேவை, காரிய அலைச்சல்கள் கூடும் நாள்.

**இடபம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கடன் தொல்லைகள் குறையும்.

**மிதுனம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, கனவு பலிதமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** அருமையான நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய தொழில் தொடங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உறவினர் பகை மாறும்.

**மகரம்:** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலாபகரமான நாள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்திப்பீர்கள்.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** உடல் நலனில் சிறு இடையூறுகள் ஏற்பட்டு அகலும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியை கூட்டும்.

**விருச்சிகம்:** நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், தேவைகள் பூர்த்தியாகும் நாள், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும், தொழில் வளர்ச்சியுண்டு.

**கன்னி:** மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

கிரகநிலை: சூரி, புத, ராகு, சுக் — செவ் — சனி, கேது — சந், குரு

சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை

13.07.2019
ஆனி 28, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
துவாதசி பின்னிரவு 2.31 மணிவரை
அனுசம் முன்னிரவு 7.05 மணிவரை
சுபநேரம் 2.59-4.29 மணிவரை
இராகுகாலம் 8.59-10.29 மணிவரை

வளவன்

# 2018 இற்குப் பின் ஒரு குழந்தைகூட எச்.ஐ.வி.தொற்றுடன் பிறக்கவில்லை

## சமுதாய வைத்திய நிபுணர் சத்யா கெரத் தகவல்

(யாழ்ப்பாணம்)

தாயில் இருந்து, குழந்தைக்கு பரவும் சிபிலிஸ் மற்றும் எச்.ஐ.வி தொற்றினை இல்லாதொழித்துள்ளதாக சமுதாய வைத்திய மற்றும் பாலியல் தொற்று வைத்திய நிபுணர் சத்யா கெரத் தெரிவித்தார். யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வேலைத்திட்டம் மிக நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு, 2013 ஆம் ஆண்டில் இருந்து இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு, 2018 ஆம் ஆண்டு தாயில் இருந்து குழந்தைக்குச் செல்லும், சிபிலிஸ் மற்றும் எச்.ஐ.வி. தொற்றையும் இல்லாதொழித்துள்ளோம்.

இதை விஞ்ஞானபூர்வமாக உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு உறுதிப்படுத்தும், வேலைத்திட்டத்தை உலக சுகாதார திணைக்களத்தின் தேசிய பாலியல் தொற்று எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டமும் ஆரம்ப சுகாதார சேவைகள் திணைக்களமும் முன்னின்று செயற்படுத்தி வருகின்றன.

தாய்மார்கள் கர்ப்ப காலத்தில் குருதிப் பரிசோதனை செய்வதன் மூலம் அவர்களுக்கு எச்.ஐ.வி தொற்று இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்குரிய மருந்துகளை வழங்கி, கடத்தலை நிறுத்தியுள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆரம்ப சுகாதார பிரிவும், தேசிய பாலியல் தொற்று மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவும், இணைந்து, தாய்மார்களிடம் இருந்து குழந்தைக்குச் செல்லும், சிபிலிசை மற்றும் எச்.ஐ.வியை ஒழித்துள்ளோம். இந்தச் செயற்பாட்டினை நடை முறைப்படுத்திய பின்னர், 2018 ஆம் ஆண்டு, ஒரு குழந்தை கூட எச்.ஐ.வி தொற்றுள்ள குழந்தையாக பிறக்கவில்லை.

இலங்கையில்இருந்து, எச்.ஐ.வி. எயிட்ஸ் இல்லாதொழிப்பதற்கான வேலைத்திட்டங்கள் உள்ளன. உலகளாவிய ரீதியில் எயிட்ஸ் இல்லாதொழிப்பதற்கான காலம், 2030 ஆம் ஆண்டு வரை உள்ளது. இலங்கையில் 2025 ஆம் ஆண்டுக்குள் எயிட்ஸ் அற்ற நாடாக இலங்கை இருக்கும்.

இலங்கையில் 33 இடங்களில், சிகிச்சை நிலையங்கள் உள்ளன. அந்த இடங்களில், வைத்திய பரிசோதனைக் கூடங்கள் உள்ளிட்ட பல உள்ளன. அந்தவகையில், அனைத்து மாவட்டங்களிலும், இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். (5-101)



பலாலி புனித செபஸ்தியார் ஆலயத்தின் திருவிழா திருப்பலி கடந்த புதன்கிழமை (ஆலயமும் அதன் பகுதியும் விடுவிக்கப்படாத நிலையில்) பலாலிச் சந்தியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகையில், பங்குத்தந்தை அருட்பணி தேவராஜன் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

# வட மாகாணத்தில் 245 இந்து ஆலயங்களுக்கு புனரமைப்பிற்கான நிதியுதவி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோகணேசனின் வழிகாட்டலில், இந்து ஆலயங்கள், இந்து சமய அறநெறிப் பாடசாலைகள் என்பவற்றை வலுப்படுத்தும் "தெய்வீகச் சேவை" திட்டத்தின் கீழ் வட மாகாண இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் மண்டபத்தில் நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் இந் நிகழ்வில் வட மாகாணத்திலுள்ள 245 ஆலயங்களுக்குப் புனரமைப்பிற்கான நிதியுதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)




# கலைஞர்கள் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபையின் பொதுக்கூட்டமும் கலைஞர் எழுத்தாளர் ஒன்றுகூடலும் 13 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் காரை நகர் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் காரைநகர், வலந்தலை சந்தியில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறும். (5)

# இரதோற்சவம்

(கொடிகாமம்)

கைதடி கயிற்றசிட்டி முருகன் கோவில் பிரம்மோற்சவப் பெரு விழா கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகிறது.

இதில் நாளை மறுதினம் திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5-114)

# விபத்தில் காயமடைந்த முதியவர் மரணம்

தென்மராட்சி-எழுதுமட்டுவாழ் பகுதியில் ஏ-9 வீதியில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற பட்டா ரக வாகனம்- துவிச்சக்கரவண்டி விபத்தில் படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனளிக்காமல் கடந்த வியாழக்கிழமை இரவு உயிரிழந்தார். மீசாலை கிழக்கு அல்லாரையைச் சேர்ந்த 71 வயது விநாசித்தம்பி மகாலிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் (5-30-114)

# கால்நடைகளுக்கான தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவும்

## மாகாணப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளுக்கு ஏற்படும் கால்வாய் நோய்க்கான தடுப்பூசிகளை பிரதேச கால்நடை வைத்திய நிலையங்கள் ஊடாகக் கால்நடைகளுக்கு பெற்றுக் கொடுக்குமாறு வடமாகாண சுகாதாரத் திணைக்கள கால்நடை உற்பத்தி மாகாணப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் 34 கால்நடை வைத்திய நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் நடைமுறைப்படுத்தப்படும் கால்வாய் நோய் தடுப்பூசிகளை கால்நடைகளுக்கு பெற்றுக்கொடுக்காதவர்கள் சம்பந்தப்பட்ட பிரதேச கால்நடை வைத்தியரை நாடுமாறு அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.(5-10)

# 5G அபாயத்தை எதிர்கொள்வது எப்படி? கலந்துரையாடலுக்கு பொது அமைப்புக்கள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், வல்லமை, தமிழ் மருத்துவர் குழு, சமூக விஞ்ஞான ஆய்வுகூடம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தும்5G அபாயத்தை எதிர் கொள்வது தொடர்பான பொதுக் கூட்டம் நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் அமைந்துள்ள Y.M.C.A கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

எனவே, பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள், சுற்றுச் சூழல் ஆர்வலர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (5)

# உயர்தர மாணவர்கள் ஒன்றுகூடல்

(கொடிகாமம்)

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பிரதான மண்டபத் தில் உயர்தர மாணவர் மன்றத் தலைவர் ஜெ.நிருஷன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை உதவிப் பொறியியலாளர் க.அருள்குமரன், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை ஆசிரியை திருமதி இரத்தினேஸ்வரி தங்கராசா ஆகியோர் கலந்து கொள்வர். (5-114)

# உணவு கையாளும் நிலையங்களுக்கு 1 இலட்சத்து 45 ஆயிரம் அபராதம்

(கரணவாய்)

உணவு கையாளும் எட்டு நிலையங்களிற்கு எதிராக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களிற்கு ஒரு இலட்சத்து நாற்பத்தையாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன் உணவு கையாளும் நிலையம் ஒன்றுக்கு சீல் வைத்து மூடுமாறும் பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் எட்டு உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக 29 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து எட்டு நிலையத்திற்கு, 29 குற்றச்சாட்டுக்குமாக ஒரு இலட்சத்து நாற்பத்தையாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன் ஒரு உணவு கையாளும் நிலையத்தை சீல் வைத்து மூடுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.(5-60)



ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் மாலை தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் மாதிரி சந்தை நிகழ்வும் அதிபர் பி.பார்த்தீபன் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக சிரேஷ்ட சட்டத்தரணி ந.ஜெயரூபன் (பழைய மாணவர்), பிரபல வர்த்தகர் என்.தேவசொரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை

1960 சார்வரி

# அகவை அறுபது

மணிவிழா அழைப்பிதழ்

2019 விஹாரி

இடம்:- அமுதசுரபி நிறுவுனர் நினைவு திருமண மண்டபம்
காலம்:- 13.07.2019 சனிக்கிழமை
நேரம்:- பி.ப.3.00 மணி (அம்பிகையின் உயர் திருவிழா 12 ஆம் நாள்)

**தலைவர்**
திருவாளர் தம்பிமுத்து சிவானந்தன் அவர்கள்
(தலைவர் ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை)

**பிரதம விருந்தினர்**
கௌரவ **சுரேன் ராவவன்** அவர்கள் (கௌரவ ஆளுநர், வடக்கு மாகாணம்)

**நிகழ்ச்சி நிரல்**

- விருந்தினர் வரவேற்பும் மங்கள ஆராத்தியும்
- திருவுருவப்படம் திரை நீக்கம்
(பிரதிஷ்டா பூஷணம் அமரர் சிவஸ்ரீ இ.கைலாசநாதக் குருக்கள் அவர்களின் திருவுருவப்படம்)
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
செல்வன்.S.சாயீசன் (அமுதசுரபி அறநெறிப்பாடசாலை மாணவன்)
- மௌனப் பிரார்த்தனை
- வாழ்த்துக் கீதம் இசைத்தல்
(அமுதசுரபி அறநெறிப் பாடசாலை ஆசிரியைகள்)
- வரவேற்பு நடனம்
(அகிலாண்டேஸ்வரி அருளக மாணவிகள், வவுனியா)
- தலைமையுரை
விழாத் தலைவர் அவர்கள்
- வரவேற்புரை
திரு.ம.அம்பிகைபாகன் அவர்கள் (செயலாளர், அமுதசுரபி)
- ஆசியுரைகள்
சிவஸ்ரீ.ப.முத்துக்குமார சுவாமிக் குருக்கள் அவர்கள்
(மஹோற்சவ குருமணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்)
சிவஸ்ரீ.கைலை வாமதேவக் குருக்கள் அவர்கள்
(நித்திய குருமணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்)
சிவஸ்ரீ.பாலகணேசக் குருக்கள் அவர்கள்
(நித்திய குருமணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்)
அதிவண நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரோ (ச.நீ) அவர்கள்
(நாகதீப விகாராதிபதி வடபிரதேச பிரதம சங்க நாயக்கர் அமரபுரபீடம்)
சிவஸ்ரீ ஜம்பு மகேஸ்வரக் குருக்கள் அவர்கள்
(நித்திய குருமணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்)
- வாழ்த்துரைகள்
திரு.F.X.செல்வநாயகம் அவர்கள் (கௌரவ ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணம்)
திரு.கா.ஆ.தியாகராசா அவர்கள் (தலைவர் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபை)
திரு.மா.வேதநாதன் அவர்கள் (முன்னாள் இந்துநாகரிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.கி.விசாகரூபன் அவர்கள் (தலைவர் தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.சோ.தில்லைநாதன் அவர்கள் (ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரி-வேலணை)
- பிரதம விருந்தினர் உரை
- அமுதசுரபி நிறுவுனர் கௌரவிப்பு நிகழ்வு
திருவாளர் நாகமுத்து காராளபிள்ளை அவர்கள்
(நிறுவுனர் ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை)
திருவாளர் முருகேசு சண்முகநாதன் அவர்கள்
(நிறுவுனர் ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை)
- மணிபல்லவத் தீவுக்கு மாண்புறு சேவை செய்தவர்களை கௌரவித்தல்
திருமிகு: நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள்
(மாவட்ட அரசாங்க அதிபர்-யாழ்ப்பாணம்)
திருமிகு: அம்பலவாணர் சோதிநாதன் அவர்கள்
(பிரதேச செயலாளர்-தீவுகள் தெற்கு வேலணை)
திருமிகு: வல்லிபுரம் ஜெகநந்தன் அவர்கள்
(பிரதம பொறியியலாளர், பெருந்தெருக்கள் திணைக்களம்-யாழ்ப்பாணம்)
திருமிகு: ப.க.பரமலிங்கம் அவர்கள்
(ஓய்வுநிலை பொதுச் சேவை ஆணைக்குழு, வடமாகாணம்)
திருமிகு: மாரிமுத்து வேதநாதன் அவர்கள்
(முன்னாள் தலைவர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர் சபை)
திருமிகு: சின்னத்துரை குகதாசன் (ஒப்பந்தகாரர்)
- மூத்த உறுப்பினர் கௌரவிப்பு
திருவாளர்.அருளம்பலம் சண்முகநாதன் (ச.நீ) அவர்கள் (உபதலைவர்-அமுதசுரபி)
- அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் கௌரவிப்பு
- மாணவர்களுக்கான கௌரவிப்பு
- நன்றியுரை
திரு.நா.க.குமாரசூரியர் (ச.நீ) அவர்கள் (உப செயலாளர்-அமுதசுரபி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C-6952)

ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி,
அன்னதான சபை, நயினாதீவு 2.

நிர்வாகம்.


# சிறைச்சாலைகளில் இருந்தே போதைப்பொருள் கடத்தல்கள் வழி நடத்தப்படுகின்றன

## சஜித் சுட்டிக்காட்டு



**(கொழும்பு)**

**சிறைச்சாலைகளில் இருந்தே போதைப் பொருள் கடத்தல்கள் வழிநடத்தப்படுகின்றன என அமைச்சர் சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டியுள்ளார்.**

கெக்கிராவையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், 'நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி போதைப் பொருள் கடத்தல் இடம்பெறுகின்றது.

உண்மையில் சாட்சியங்களுடன் இவை நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், அவர்களுக்கு மரண தண்டனை வழங்குவதில் எவ்வித தவறும் இல்லை என்பதே எனது நிலைப்பாடு.

மரண தண்டனைக்கு எதிராக பேசுவோரிடம் நான் ஒரு விடயத்தை கேட்கின்றேன். போதைப்பொருள் கடத்தல் காரணமாக நாட்டில் பாதிக்கப்படும் 45 இலட்சம் பாடசாலை மாணவர்களை பாதுகாப்பதற்காக என்ன செய்ய போகின்றீர்கள்? ஆகவே, போதைப் பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பாக நாம் தீர்மானம் எடுக்க வேண்டும்.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பாக சிந்திக்க வேண்டாம். தயவு செய்து 45 இலட்சம் பாடசாலை மாணவர்கள் குறித்து சிந்தியுங்கள்' என மேலும் தெரிவித்தார். (7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 50¾
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L,சொந்தவியாபாரம்
தொ.இ: B/9896

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 178cm
தகைமை/தொழில்:O/L, Canada
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு விவாகரத்தும் விரும்பத்தக்கது
தொ.இ: B/9900

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 60
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.Sc பட்டதாரி , UK
எதிர்பார்ப்பு: வெளிநாடு PR
தொ.இ: B/2985

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 60 சூரி செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L,வெளிக்கள உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்
தொ.இ: B/2997

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 32½ செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BAபட்டதாரிஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசதொழில் (உள்நாடு)
தொ.இ: G/5567

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 2 ½
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, BA following
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: G/5574

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 16 ¼
உயரம்: 5'
தகைமை/தொழில்:O/L, சொந்ததொழில்
எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/5575

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: 28
தகைமை/தொழில்BAபட்டதாரி அரசதொழில்
எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்த தொழில் (உள்நாடு)
தொ.இ: G/5576

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இ.தொ.கா.உடன் ஏற்பட்ட புரிந்துணர்வு அரசியல் கூட்டணி அல்ல- பிரபா கணேசன்

(கொட்டகலை)

கொட்டகலையில் கைச்சாத்திடப்பட்ட ஆவணம் சமூக நலன் விரும்பி ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பேயொழிய இது ஒரு தேர்தலுக்கான கூட்டணியோ அல்லது அரசியல் கூட்டணியோ அல்ல. இக்கூட்டணியில் எதிர்மாறான கருத்துகளைக் கொண்ட அமைப்புகளும் சரி, அரசியல் கட்சிகளும் சரி தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு இணைந்து செயற்படலாம்.

இந்த அமைப்பிற்கு எவரும் தலைவராக நியமிக்கப்படவும் இல்லை. அதற்கான தேவையும் இல்லை. இது ஒரு பொது அமைப்பாகவே செயற்படும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில்,

வடக்கிலும் கிழக்கிலும் பலர் இவ் அமைப்பில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு பகுதியைச் சார்ந்தவர்களின் தலைமையில் அந்த மாகாணங்களில் இவ் அமைப்பின் நிகழ்வுகள் இடம் பெறவிருக்கின்றன.

இது முற்றிலும் அரசியலுக்கு அப்பாற்பட்ட அமைப்பில் இணையும் அனைத்து அரசியல் கட்சிகளோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களோ, சமூக அமைப்புகளோ, தங்களது இரு பிரதிநிதிகளை அமைப்பின் செயற்குழுவிற்கு பரிந்துரைக்கலாம்.

இச்செயற்குழுவே இவ் அமைப்பின் தலைமை பொறுப்பை ஏற்கும். அரசியலுக்கு அப்பால் முற்றுமுழுதாக நாடு முழுவதும் வாழும் தமிழ் மக்களின் எண்ணங்களுக்கு முகம் கொடுப்பதே இந்த அமைப்பின் முழுமையான நோக்கமாகும். அரசியல் கூட்டணியாக இது ஒரு போதும் செயற்பட முடியாது என்ற அடிப்படையிலேயே நாம் இணைந்துள்ளோம் என மேலும் தெரிவித்துள்ளார். (9)

# தொழிலாளர்களின் சம்பள விவகாரம் ஹற்றனில் கையெழுத்து வேட்டை





(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குறுதியளித்த 50 ரூபாவை உடனே பெற்றுத் தருமாறு கோரி, மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்க பிரிவான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தினர் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை ஹற்றன் நகரத்தில் குறித்த கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கையினை நிறைவேற்றாத அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கு தோட்டத் தொழிலாளர்கள் முன்வர வேண்டுமென கோரி மலையகத்தின் அனைத்து பிரதான நகரங்களிலும் இந்த கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள மலையக அமைச்சர்கள் தொழிலாளர்களுக்கு பாதீட்டில் பெற்று தருவதாக கூறிய 50 ரூபாவை இதுவரை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளவில்லையெனவும் தோட்டத்தொழிலாளர் சங்கம் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு புதியதொரு அமைப்பை கட்டியெழுப்பவேண்டுமென இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இதன்போது 100க்கும் அதிகமானோர் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# காணிப் பயன்பாட்டு குழுக்கூட்டம்

(பனிக்கன்குளம்)

ஒட்டுசுட்டான் பிரதேச காணிப் பயன்பாட்டு குழுக் கூட்டம் நேற்று காலை 10 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல்வேறு தரப்பினரால் காணி பிணக்குகள் தொடர்பான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் அந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அந்த காணியை வழங்குவதா? இல்லையா என்பது தொடர்பாக தீர்மானிக்கின்ற விசேட கூட்டமாக இக் கூட்டம் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலனுடைய தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள், காணி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்கள்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டு குறித்த ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காணிகளை வழங்குவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. (9-281)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (7-60)

# மக்களின் நலனுக்காக இதயங்களினால் ஒன்றிணைவோம்

## வவு. உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் மஸ்கெலியா பிரதேச சபைக்கு விஜயம்





(நெளுக்குளம்)

மக்களின் நலனுக்காக இதயங்களினால் ஒன்றிணைவோம் என்ற தொனிப்பொருளில் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் மஸ்கெலியா பிரதேச சபையில் இடம்பெற்ற சுத்தமான நகரம் பசுமையான நகரம் செயற்றிட்ட நடவடிக்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்காவினால் அழைத்துச் செல்லப்பட்ட வவுனியா மாவட்ட உள்ளூராட்சி சபை மன்றங்களில் 11 உறுப் பினர்கள் மஸ்கெலியா பிரதேச சபைத் தவிசாளர் திருமதி சென்பகவள்ளி தலைமையில் நேற்று இடம்பெற்ற சபை நட வடிக்கைகளில் கலந்து கொண்டதுடன் அங்குள்ள நடைமுறைகளையும் பார்வையிட்டனர்.

பிரதேச சபை வளாகத்தில் மரநடுகையினையும் மேற்கொண்டுள்ளனர்.ஒரு நாள் பயணமாக அங்கு சென்ற உறுப்பினர்கள் மஸ்கெலியா நகரின் கழிவகற்றல் செயற்றிட்டத்தையும் பார்வையிட்டு அனுபவங்களைப் பெற்றுக்கொண்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர். (9-299)

# விடுதலைப் புலிகளின் தங்கப்புதையலை தேடி ஏமாற்றமடைந்த பொலிஸார்!



(பனிக்கன்குளம்)


முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் விடுதலைப்புலிகளால் நகைகள் புதைக்கப்பட்டதாக நம்பப்படும் தனியார் வீடு ஒன்றில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அகழ்வு நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் அந்த இடத்தில் புதைக்கப்பட்ட தங்கத்தை தேடியே இந்த அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கடந்த 27 ஆம் திகதி முதல் பொலிஸாரின் பாதுகாப்பு போடப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் தோண்டுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி அதிகாலை இதே பகுதியில் தங்கத்தை தேடி சட்டவிரோத அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட 14 பேர் அடங்கிய குழு ஒன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த பகுதியில் தோண்டி பார்ப்பதற்கு நீதிமன்ற அனுமதி வழங்கியுள்ள நிலையில் புதுக் குடியிருப்பு உதவி பிரதேச செயலாளர், கிராம சேவையாளர், தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள், படை அதிகாரிகள், பொலிஸார் ஆகியோர் முன்னிலையில் குறித்த பகுதி தோண்டப்பட்ட போதும் எதுவித பொருட்களும் கிடைக்காத நிலையில் அதனை மூடிவிட்டு சென்றுள்ளனர். (9-281)

# பாடசாலை கட்டடங்கள் திறப்பு





(மன்னார்)

பண்பு, அறிவு மற்றும் வலுமிக்க மனிதநேய மாணவ சந்ததியினரை உருவாக்கும் நோக்கில் அருகில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை எனும் திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சின் 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட இரண்டு கட்டடங்களுக்கான திறப்பு விழா நிகழ்வு நேற்று மன். ஆண்டாங்குளம் பாடசாலையில் இடம் பெற்றது

ஆரம்பப்பிரிவு கற்றல் வள நிலையம் மற்றும் இடைநிலை விஞ்ஞான ஆய்வு கூடம் கையளிக்கும் நிகழ்வு மன். ஆண்டாங்குளம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஜி.அந்தோனிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

யுத்தத்தால் நேரடியாக பாதிக்கப்பட்ட குறித்த பாடசாலையானது கட்டடங்கள் அனைத்தும் சேதம் அடைந்த நிலையில் கல்வியமைச்சின் பங்களிப்பில் குறித்த பாடசாலைக்கான கட்டடங்கள் 2016 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு அமைக்கப்பட்டு நேற்று மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்,மடு உதவிக் கல்விப் பணிப்பாளர் , ஆசிரிய ஆலோசகர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ,ஆசிரியர்கள், பாடசாலை நலன்புரி சங்க உறுப்பினர்கள்,மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (9-285)



# ஜனாதிபதிக்கு எதிராகவும் குற்றப்பிரேரணை அவசியம்



## ஹிருணிகா தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராகவும் குற்றப் பிரேரணை கொண்டு வர வேண்டியது அவசியமென நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் வியாழக் கிழமை நாடாளுமன்றத்தில் பிரதமர், அரசாங்கம் மற்றும் அமைச்சரவைக்கு எதிராக கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்ததாவது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்கொண்டு வர வேண்டியது அவசியமாகும்.

அந்தவகையில் ஜனாதிபதிக்கு எதிராகவும் குற்றப் பிரேரணை தயாரிக்கப்படுமாயின் அதற்காக 75 பேரின் கையொப்பங்களை திரட்டித் தருவதற்கு தயாராகவுள்ளேன்.

இதேவேளை எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி வேட்பாளராக தன்னை நிறுத்துவாரென ஜனாதிபதி கூறியதாக அண்மையில் கேள்விப் பட்டேன். அவ்வாறு அவரை நிறுத்தினால் பொதுஜன பெரமுன பாரிய பின்னடைவை நிச்சயம் சந்திக்கும் என ஹிருணிகா பிரேமச்சந்திர மேலும் தெரிவித்துள்ளார். (7)

# மோசடிகளை ஒழிப்பதாகக் கூறும் ஜனாதிபதி மத்திய வங்கி ஊழலை தடுக்காதது ஏன்?

## எதிர்க்கட்சியினர் கேள்வி

ஊழல் மோசடிகளை ஒழிப்பதாகக் கூறி கடந்த 2015 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரு மாதத்திலேயே மத்திய வங்கி மோசடியில் ஈடுபட்டது.

ஊழலை ஒழிப்பதாகக் கூறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தனது ஆட்சியின் கீழ் இடம்பெற்ற இந்தப் பாரிய ஊழலைத் தடுக்க முடியாமல் போனது என்று பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஊழலை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் நான்கு வருடங்களாகியும் அவ்வாறு எதையுமே செய்யவில்லை. மாறாக மகிந்த அரசாங்கத்தை குறை கூறுவதையே பிரதான வேலையாகச் செய்து கொண்டிருந்தார்கள்.

தமது ஊழலை மறைத்து ஏனையோர் மீது பழி சுமத்திக் கொண்டிருந்த இந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல்களைக் கடந்த 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்ததிலிருந்து நாம் வெளிப்படுத்தி வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (7)

# பதவியில் இல்லாதவர்களுக்கான அமைப்பை உருவாக்க வேண்டும்

## முன்னாள் நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் கோரிக்கை



(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கான அமைப்பினை உருவாக்குமாறு முன்னாள் உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலம் மற்றும் அதற்கு முன்னைய காலப்பகுதியில் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பதவிகளை வகித்து தற்போது நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களாக பதவி வகிக்காதவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்த அமைப்பினை உருவாக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுடன், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இதன்போது, இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், முன்னாள் உறுப்பினர்களின் அனுபவங்கள் மற்றும் யோசனைகள் ஊடாக கட்சியை மேலும் வலுப்படுத்த முடியும் என்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. (7)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ். அருணோதயக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கதிர்காம சேகரம் திறந்தவெளி அரங்கில் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்சில் பிரதம விருந்தினராக தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய வௌிவிவகார அமைச்சர் மனோகணேசன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆசியுரை வழங்குவார். (7-60)

# பள்ளத்தில் பாய்ந்த மோ.சைக்கிள் பின்னால் அமர்ந்து சென்ற யுவதி பலி

## செலுத்திச் சென்றவர் ஆபத்தான நிலையில்

(வெல்லவாய)

மோட்டார் சைக்கிளொன்று நூறு அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்திற்குள்ளாகியதில் குறித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து சென்ற யுவதி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் எல்ல- வெல்லவாய பிரதான பாதையில் 14 மற்றும் 15 ஆகிய மைல்களுக்கிடையில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

பதுளைப் பகுதியின் கட்டவளை என்ற இடத்தைச் சேர்ந்த ஏ.எம்.திலினி நிமேசா என்ற 19 வயது யுவதியே விபத்தில் இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந் நிலையில் குறித்த மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞர் ஆபத்தான நிலையில் வெல்லவாய அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் விபத்து குறித்து எல்ல பொலிஸார் ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டுள்ள நிலையில் அதிக வேகமே இவ்விபத்திற்குக் காரணமென்றும் பொலிஸார் தெரிவித்தனர். (7)

# தேர்தல் பிரசாரத்துக்காக 3 பில்லியன் ரூபாவை செலவிட அரசாங்கம் திட்டம்-மகிந்த அமரவீர

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களை இலக்காகக் கொண்ட பிரசாரங்களுக்காக அரசாங்கம் சுமார் 3 பில்லியன் ரூபாவை அண்மித்த தொகையைச் செலவிடுவதற்குத் தயாராகி வருவதாக குற்றம் சாட்டிய பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர, இது குறித்த மேலதிக விபரங்களை எதிர்வரும் நாட்களில் வெளியிடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மருதானையிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் சமுர்த்தியை வழங்கும் பிரசாரத்தை முன்னெடுப்பதற்காக மாத்திரம் சுமார் 4000 இலட்சம் ரூபாவை அரசாங்கம் செலவிட்டிருக்கிறது. அதே போன்று என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா, கம்பெரலிய செயற்றிட்டங்களுக்கான பிரசார நடவடிக்கைகளுக்காக 4925 இலட்சம் ரூபா கோரி அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வாறு பிரசாரங்களுக்காக செலவிடும் நிதியிலும் மோசடி செய்வதற்கும், தமக்கு ஆதரவானவர்களுக்கு பிரசார வேலைத் திட்டங்களை வழங்குவதற்கும் முயற்சித்து வருவதை அறிய முடிகிறது. இதுகுறித்த தகவல்களையும் எதிர்வரும் வாரமளவில் ஆதாரபூர்வமாக வெளியிடுவோம்.

அரசாங்கத்தின் தேர்தலை மையமாகக் கொண்ட பிரசாரங்களை இலவசமாகச் செய்ய வேண்டும் என்று அரச ஊடகங்களை நிர்ப்பந்திக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. இதனால் அரச நிறுவனங்கள் அனைத்தும் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.


அத்துடன் அரசாங்கத்திற்குள்



ளான குழப்பநிலை தற்போது உக்கிரமடைந்து இருக்கிறது. அரசாங்கத்திலும், எதிர்க்கட்சியிலும் வேட்பாளர்கள் பலர் இருக்கிறார்கள். ஜனாதிபதி வேட்பாளர் என்பவர் அதிகாரத்திற்கு வருவதை நோக்காகக் கொண்டு செயற்படுவதை விடுத்து, நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எத்தகைய வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் இதன்போது தெரிவித்தார். (7)

# திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவு தடை உத்தரவை கண்டித்து போராட்டம்






(நெளுக்குளம்)

மன்னார் திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவை அமைப்பதற்கு பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவைக் கண்டித்து நேற்று காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று ஸ்ரீகந்தசாமி ஆலய முன்றலில் முன்னெடுக்கப்பட்டது. வவுனியா மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும், ஏனைய பொது அமைப்புக்களும் இணைந்து முன்னெடுத்த இந்தப் போராட்டத்தில் ஆயரே பிரதேச சபையை ஆட்சி செய்யாதே, ஆட்களை வெருட்டாதே, எம்மவரைப் பங்கு போடாதே, வீடு வீடாத்திரியாதே, அன்பு செய்வதுபோல் ஆணவம் காட்டாதே, மன்னார் ஆயரே புராதனமான பாரம்பரியத்தை சிதைக்காதே, திருக்கேதீச்சர வளைவை மறைக்காதே, ஈழம் எங்கள் பூமி போன்ற வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கலந்துகொண்டனர்.

போராட்டம் மேற்கொண்டவர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எஸ். தனபாலனிடம் இந்து கலாசார அமைச்சிற்கு அனுப்புமாறு மகஜர் ஒன்றினை கையளித்ததுடன் போராட்டத்தை நிறைவு செய்தனர். (9-299)

## இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் புலமைப் பரிசில் வழங்கி வைப்பு




(பனிக்கன்குளம்)

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற பிள்ளைகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது

குறித்த சமூக பாதுகாப்பு திட்டத்தில் ஒரு வயது முதல் 18 வயது வரையான பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். அந்த வகையில் பிள்ளைகளை இணைக்கின்ற செயற்றிட்டத்தை கிராம உத்தியோகத்தர். சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூகசேவைகள் உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட செயலக, சமூக பாதுகாப்பு சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டுகளில் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளில் கடந்த வருட புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாக தெரிவு செய்யப்பட்ட 11 மாணவர்களுக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து இந்த புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கப்பட்டது. இதனூடாக அவர்களுடைய சேமிப்பு தொகைக்கு ஏற்ற வகையில் 5000 ரூபா முதல் 50000 ரூபா வரையான பணப்பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.

சமூக பாதுகாப்பு சபையினுடைய மாவட்ட இணைப்பதிகாரி க.சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம. பிரதீபன், புதுக்குடியிருப்பு பிரதேச உதவி பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கணக்காளர், சமூகசேவைகள் உத்தியோகத்தர், அரச அதிகாரிகள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பணத்தை பெற்றுக் கொண்ட மாணவர்களுடைய பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த மாணவர்களை குறித்த திட்டத்தில் இணைத்த அதி காரிகளும் சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (9-281)




## கிளிநொச்சியில் இம்முறை 68 வீதமான நிலப்பரப்பில் சிறுபோக பயிர்ச்செய்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு சிறுபோகத்தின் போது 68 வீதமான நிலப்பரப்பில் சிறுபோக பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் இராஜகோபு தெரிவித்துள்ளார்.

* விவசாயத்தை முதன்மையாகக் கொண்ட மாவட்டமாக காணப்படும் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளாக நிலவிய வரட்சி மற்றும் நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்படாமை என்பவற்றால் காலபோக பயிர்ச் செய்கைகள் உரியவாறு முன்னெடுக்கப்பட்டாலும் குறைந்தளவு நிலப்பரப்புக்களிலேயே சிறுபோக பயிர்ச்செய்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

நீண்டகால இடைவெளிகளுக்குப் பின்னர் இரணை மடுக்குளம் உள்ளிட்ட குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் கடந்த டிசெம்பர் மாதம் பெய்த மழையினால் குளங்களின் நீர் மட்டங்கள் உயர்ந்தமை என்பவற்றால் காலபோகச் செய்கை யை அடுத்து சிறுபோகச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாண்டு முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக பயிர்ச் செய்கைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர், இம்முறை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 9 குளங்களிலும் 68 வீதமான நிலப்பரப்பில் சிறுபோக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள ஒன்பது குளங்களின் கீழுள்ள 13 ஆயிரத்து 756.9 ஹெக்டேயர் மொத்த நிலப்பரப்பில் ஒன்பதாயிரத்து 367.3 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது மொத்த நிலப்பரப்பில் 68 வீதமாகும் என தெரிவித்துள்ளார்.

அதாவது, அக்கராயன் குளத்தின் கீழ் 2790 ஏக்கர் நெற்செய்கையும் 466 உப உணவு பயிர்ச்செய்கையும் இரணைமடுக்குளத்தின் கீழ் 15 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை, 500 ஏக்கர் சிறுதானிய செய்கை, திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 600 ஏக்கர் தோட்டச் செய்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கல்மடுக் குளத்தின் கீழ் 1346 ஏக்கர் செய்கையும் கனகாம்பிகைக்குளத்தின் கீழ் 200 ஏக்கர் செய்கையும் கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் 500 ஏக்கரும் குடமுருட்டிக்குளத்தின் கீழ் 322 ஏக்கரும் பிரமந்தனாறுக் குளத்தின் கீழ் 450 ஏக்கரும் புதுமுறிப்புக்குளத்தின் கீழ் 850 ஏக்கரும் வன்னேரிக்குளத்தின் கீழ் 123 ஏக்கரும் என ஒன்பதாயிரத்து 367.3 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (9-315)

## வினைத்திறனான செயற்பாடு - தேசிய ரீதியில் நானாட்டான் பிரதேச சபைக்கு வெள்ளிப்பதக்கம்



(மன்னார்)

பாராளுமன்ற அரச கணக்கு குழுவினால் கடந்த 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அரச அலுவலகங்கள் நிதி கோட்பாடுகளுக்கு இணங்குதலுக்கான மதிப்பீட்டுச் செயற்பாட்டில் வினைத்திறனாகச் செயற்பட்டமைக்காக வடமாகாணத்தின் 12 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கடந்த வாரம் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் வடமாகாண ரீதியில் உள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களுள் வினைத்திறனாகவும் சிறப்பாகவும் செயற்பட்டமைக்காக மன்னார் நானாட்டான் பிரதேசசபைக்கு தேசிய ரீதியில் வெள்ளிப் பதக்கம் கிடைத்துள்ளது.

குறித்த விருது மற்றும் சான்றிதழ்களை வைபவ ரீதியாக மன்னார் நானாட்டன் பிரதேச சபை தவிசாளரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை நானாட்டான் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி, பிரதேசசபை செயளாலர் யோகேஸ்வரம் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்திலுள்ள மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைகளில் குறித்த நானாட்டான் பிரதேச சபை மாத்திரமே தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-285)

## 5G கலந்துரையாடல்

(வவுனியா)

நவீன உலகில் தொலைபேசி பாவனையும் 5G தொழில்நுட்பமும் என்ற தொனிப் பொருளில் கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா பூந்தோட்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் கால்நடை மருத்துவர் சி.கிருபானந்தகுமாரன் கருத்துரை வழங்கவுள்ளார். (9)

# பாவனையற்றுள்ள அரச வீட்டுத்திட்டம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் தீர்மானம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் கடந்த 2012 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 50 பயனாளிகளுக்கான அரச வீட்டுத்திட்டம் இன்றுவரை பாவனைக்கு உட்படுத்தப்படாத நிலையில் இது தொடர்பாக பொதுச் சுகாதாரத்திற்கு பங்கம் விளைவித்தல் அயலில் உள்ள மக்களுக்கு அச்சுறுத்தலான சூழ் நிலையில் காணப்படுகின்றமையால் பிரதேச சபையின் அதிகாரங்களுக்கு உள்ளடங்கி சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள நேற்று புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவில் கடந்த 2012 ஆம் ஆண்டு 50 அரச உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்காக அரை ஏக்கர் காணியும் ஒரு இலட்சம் ரூபாய் மானியம் மற்றும் 2 இலட்சம் ரூபாய் கடன் அடிப்படையில் அவர்களுக்கான வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை குறித்த பகுதியில் ஒரு குடும்பம் கூட வசிக்காத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையினால் அந்த பகுதியில் பல்வேறு கலாசார சீரழிவுகளும் குற்றச் செயல்களும் இடம்பெறுவதாக பல தரப்பினருக்கும் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதன் அடிப்படையில் குறித்த அப்பகுதி மக்களால் பிரதேச சபைக்கு எழுத்து மூலமாக வழங்கப்பட்ட மகஜர் நேற்று முன்தினம் பிரதேச சபை அமர்வில் தவிசாளர், உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதன் அடிப்படையில் இந்த மகஜர் மூலம் தெரிவிக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு பிரதேச சபையின் அதிகாரங்களுக்கு உட்பட்டு பொதுச் சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கின்றமை மற்றும் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக காணப்படுகின்ற கட்டடங்கள் தொடர்பான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இதற்குரிய நடவடிக்கை எடுப்பது தொடர்பாக தவிசாளரால் உறுப்பினர்களின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் உறுப் பினர்களின் வாதப்பிரதிவாதங்களைத் தொடர்ந்து மேற் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த தவிசாளர், தற்போது விஷ ஜந்துக்களின் இருப்பிடமாகவும் பல்வேறு குற்றச்செயல்களின் மத்திய நிலையமாகவும் தான் இந்த இடம் இருக்கின்றது. எனவே அங்கு நிரந்தரமாக கூடியிருந்த மக்களுக்கு இந்த வீட்டுத்திட்டம் ஒரு அபாயகரமான இடமாக மாறியிருக்கின்றது. எனவே பாழடைந்த கட்டடங்கள் என்னும் சட்டப்பிரிவு ஊடாகவும் பொதுச் சுகாதாரத்துக்கு ஒவ்வாத இடங்கள் என்ற சட்டத்திற்கு ஊடாகவும் இந்த விடயத்திற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சபை அனுமதிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து இந்த விடயம் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்கு சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. (9-281)

## பரிசளிப்பு விழா

கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் பூலோகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிறிதரன், கௌரவ விருந்தினராக பழைய மாணவனும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபருமான கி.விக்கினராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9)




# புயல் காற்றினால் வீடுகள் சேதம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் வீசிய கடும் காற்று காரணமாக பல வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடும் வரட்சியும் வெப்பமும் நிலவி வந்த நிலையில் நேற்று முன்தினம் சில இடங்களில் மழை பெய்தது. இந்நிலையில் மாங்குளம் பகுதியில் வீசிய கடும் காற்றினால் வீதிகளில், வீதியோரங்களில் நின்ற மரங்கள் பல முறிந்து விழுந்து வீதியில் போக்குவரத்து தடைப்பட்டதுடன் பயன்தரு மரங்கள் பலவும் நாசமாகியுள்ளன.

அத்தோடு மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 9 வீடுகளும் தச்சடம்பன் பகுதியில் ஒரு வீடும் புலுமச்சிநாதகுளம் பகுதியில் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் சேத மடைந்த வீடுகளை ஒட்டுசுட் டான் பிரதேச செயலாளர் த.அகிலன், மாங்குளம் கிராம உத்தியோகத்தர் தனபால்ராஜ், அம்பகாமம் பதில் கிராம உத்தியோகத்தர் ரஞ்சிதகுமார், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் மு.முகுந்தகஜன், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (9-281)

# சாந்தபுரம் பிரதான வீதியை விரைவாக புனரமைக்க கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்திற்கான பிரதான வீதியினை விரைவாக புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்திற்கான பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதனால் இப்பிரதேசத்தில் வாழும் சுமார் 700 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்துக்களில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றன.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பிரதான வீதி போக்குவரத்து துண்டிக்கப்பட்டும் வீதி சேதமடைந்தும் காணப்பட்டது.

இந்நிலையில் குறித்த வீதியை புனரமைத்துத் தருமாறு கடந்த பல வருடங்களாக கோரிய போதும் இதுவரை புனரமைக்கப் படவில்லை என்றும் அதனை புனரமைத்து தருமாறும் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த வீதியின் குறிப்பிட்ட அளவு தூரம் முதற்கட்டமாக புனரமைப்பதற்காக வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர், வீதி அபிவிருத்தி திணைக்களப் பொறியியலாளர்கள் நேரடியாக சென்று வீதியை பார்வையிட்டதுடன் குறித்த வீதியை விரைவாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கு மாறு அபிவிருத்தி பொறியி யலாளர் கோரியுள்ளார். (9-315)

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கம்பரெலிய திட்டத்தினூடாக 101 வேலைத்திட்டங்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்கு கம்பரெலியத்திட்டத்தினூடாக 101 வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 77. 4 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாக பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

19 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் ஊடாக 37 திட்டங்களுக்காக 31.4 மில்லியன் ரூபாவும் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஊடாக 26 திட்டங்களுக்கு 19.5 மில்லியன் ரூபாவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஊடாக 22 திட்டங்களுக்காக 16.7 மில்லியன் ரூபாவும் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஊடாக 16 திட்டங்களுக்காக 9.8 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 101 திட்டங்களுக்காக 77.4 மில்லியன் ரூபாய்கள் கிடைக்கப் பெற்ற நிலையில் தற்போது 69 வேலைத் திட்டங்கள் நிறைவடைந்துள்ளதாகவும் ஏனைய திட்டங்கள் நடைமுறையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மீளாய்வு கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர், பிரதேச செயலக கணக்காளர், உதவிப் பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-281)

# மரக்கடத்தலில் ஈடுபட்ட 9 பேர் கைது



(நெளுக்குளம்)

வவுனியாவில் கடந்த மூன்று தினங்களாக மரக்கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது 3 வாகனங்களுடன் 9 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் அவர்களிடமிருந்து 20 இலட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகளையும் கைப் பற்றப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேவிக்கிரம தலைமையின் கீழ் செயற்பட்ட விசேட பொலிஸ் பிரிவில் 7 பேரடங்கிய பொலிஸ் குழுவினரால் கடந்த மூன்று தினங்களாக வவுனியா புளியங்குளம் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட நொச்சிக்குளம், புதூர், பரசங்குளம், அனந்தர் புளியங்குளம் பகுதிகளில் மேற் கொண்ட திடீர் சுற்றிவளைப்புக்களின் போது 20 இலட்சம் ரூபா பெறுமதியான 35 முதிரை குற்றிகள் 15, தேக்கங்குற்றிகள் என்பனவற்றைக் கைப்பற்றியுள்ளதுடன் இதற்குப்பயன்படுத்திய பாரஊர்தி, பட்டா ரக கப் வாகனங்கள் என்பனவற்றுடன் சந்தேக நபர்கள் 9 பேரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


கைப்பற்றிய பொருட்களுடன் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இவ்விசேட நடவடிக்கையின் போது பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் பொன்சேகா, புளியங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுபுன் விதானகே, பொலிஸ் பரிசோதகர்களான ரட்ணாயக்க, ஜெயசூரிய, திஸாநாயக்க, அத்தநாயக்க, பொலிஸ் உதவி பரிசோதகர் சேனநாயக்க ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். (9-299)

# பாரதம்

## பா.ஜ.க. அரசு தொழிலதிபர்களைவிட விவசாயிகளை தாழ்வாக கருதுகிறதா?

### நாடாளுமன்றில் ராகுல் கேள்வி



(சென்னை)

விவசாயிகளின் கடனைத் திருப்பி செலுத்த கால அவகாசத்தை நீடிக்கவேண்டும் என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியதுடன் பா.ஜ.க. அரசு தொழிலதிபர்களை விட விவசாயிகளை தாழ்வாக கருதுகிறதா? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வின்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "நாடு முழுவதும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் தற்கொலை அதிகரித்து வருகிறது.

குறிப்பாக, கேரளாவில் விவசாயிகள் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அங்கு தற்போது வரையில் 18 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

வயநாட்டில், கடனைத் திருப்பிச் செலுத்தாதமைக்காக சுமார் 8 ஆயிரம் விவசாயிகளுக்கு வங்கிகள் நோட்டீஸ் அனுப்பியுள்ளன. அடுத்தகட்ட நடவடிக்கையாக, விவசாயிகளின் நிலங்களை பறிமுதல் செய்யும் நடவடிக்கையை எடுக்கவுள்ளன.

இதனால் தங்கள் நிலங்களில் இருந்து வெளியேற்றப்படும் அச்சுறுத்தலை விவசாயிகள், எதிர்நோக்கியுள்ளனர். வரவு-செலவுத் திட்ட த்தில் விவசாயிகளுக்கு எந்த நிவாரணமும் அளிக்கப்படவில்லை.

மாறாகப் பெரும் தொழிலதிபர்களுக்கு 4 இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாவுக்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அப்படியானால், இந்த அரசு பெரும் தொழிலதிபர்களை விட விவசாயிகளைத் தாழ்வாக கருதுகிறதா?

விவசாயிகளுக்கு பிரதமர் மோடி வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (7)

## பா.ஜ.க. ஆட்சியில் விவசாயிகள் தற்கொலை செய்யவில்லை

### ராஜ்நாத்சிங் சுட்டிக்காட்டு



(சென்னை)

விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதாகவும் பிரதமர் நரேந்திர மோடி, ஆட்சிக்கு வருவதற்கு முன்புதான் விவசாயிகளின் தற்கொலைச் சம்பவம் அதிகளவில் இடம்பெற்றது எனவும், மோடியின் ஆட்சியில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளவில்லை என்றும் இராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் சுட்டிக்காட்டியுள்ளார்.

பா.ஜ.க. அரசு தொழிலதிபர்களை விட விவசாயிகளை தாழ்வாக கருதுகிறதா என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "விவசாயிகளின் தற்போதைய நிலைமை கடந்த 2 அல்லது 4 ஆண்டுகளில் ஏற்பட்டதல்ல. பத்தாண்டுகளாக இந்த நாட்டை ஆண்டவர்கள்தான் விவசாயிகள் நிலைமைக்கு காரணம்.

விவசாயிகளின் விளை பொருட்களுக்கு மோடி அரசு போல், இதற்கு முன்பு எந்த அரசும் குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்திக் கொடுத்தது இல்லை.

அவர்களின் வருமானத்தை இரட்டிப்பாக்க மோடி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

விவசாயிகள் எவ்வளவு நிலம் வைத்திருந்தாலும், ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. இதனால், விவசாயிகளின் வருமானம் கடந்த ஆண்டுகளை விட 20 முதல் 25 சதவீதம் உயர்ந்து இருப்பதாக ஒரு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது என மேலும் தெரிவித்தார். (7)

## பாகிஸ்தானில் இரு ரயி…

## உயிரிழப்பு 20 ஆக…

### பாக்.பிரதமர் இரங்…





(லாகூர்)

பாகிஸ்தானில் சரக்கு ரயில் மீது பயணிகள் ரயில் மோதிய விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானின் கிழக்கு மாகாணத்துக்குட்பட்ட சாதிக்காபாத் தேசில் பகுதியில் வால்கர் ரயில் நிலையம் உள்ளது. இங்கு

## ஈராக்கில் இராணுவவீ…

## 11 ஐ.எஸ். பயங்கரவா…

### ✦7 பயங்கரவாதிகள் கைது…
### ✦100 இற்கும் மேற்பட்ட பதுங்…



(பக்தாத்)

ஈராக்கில் இராணுவ வீரர்கள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 11 பேர் பலியாகினர் என அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதாக கடந்த 2017ஆம் ஆண்டு இறுதியில் முன்னாள் பிரதமர் ஹைதர் அல்-அபாடி அறிவித்தார். ஆனால், அண்மைக்காலமாக அங்கு ஐ.எஸ். அமைப்பு மீண்டும் தலைதூக்க தொடங்கியுள்ளது. அவர்களை ஒடுக்க ஈராக் இராணுவ வீரர்கள் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்நிலையில், ஈராக்கில் சிறப்பு அதிரடிப்படையினர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தனர். அப்போது அவர்கள் தெரிவிக்கையில்,ஈராக்கில் இராணுவம் நடத்திய தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 11 பேர் கொல்லப்பட்டனர்.7 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். மேலும் பயங்கரவாதிகளின் பதுங்குகுழிகள் 100க்கும் மேற்பட்டவை அழிக்கப்பட்டன. அவர்களிடம் இருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 54 வெடிமருந்து கிடங்குகள் அழிக்கப்பட்டன என பாதுகாப்பு படை அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

## 16 அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்து சபாநாயகர் தீர்மானிக்க முடியாது

### உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

(கர்நாடகா)

கர்நாடகாவில் 16 அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்களின் இராஜினாமாக் கடிதங்கள் குறித்து சபாநாயகர் எந்த முடிவையும் எடுக்கக் கூடாது என உச்ச நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்யக்கோரி கர்நாடக இளைஞர் காங்கிரஸ் உள்ளிட்ட 400 பேர் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்கள் 16பேர் தங்கள் பதவியை இராஜினாமா செய்துள்ள நிலையில் காங்கிரஸ் - மதசார்பற்ற ஜனதாதள கூட்டணி ஆட்சிக்கு சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## கடலுக்குள் மூழ்கிய கப்பலில் அணுக் கதிர்வீச்சு வெளியேற்றம்

### ஆய்வாளர்கள் எச்சரிக்கை

(ஒஸ்லோ)

கடந்த 1989 ஆம் ஆண்டு கடலுக்குள் மூழ்கிய சோவியத் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து அணுக் கதிர்வீச்சு வெளியேறுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நோர்வே ஆய்வாளர்கள் இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளனர்.

எனினும், தற்போதைய நிலையில் அந்தக் கதிர்வீச்சின் அளவு குறைவாக உள்ளதால் அந்த வழியாகச் செல்லும் மீன்களுக்கோ, மனிதர்களுக்கோ எந்த ஆபத்தும் இல்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள

# ரயில்கள் மோதல்!

## ஆக அதிகரிப்பு

### ரங்கல்



நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது எதிர் திசையில் வந்த பயணிகள் ரயில் தவறான வழித்தடத்தில் சென்று மோதியது.

இதில் பயணிகள் ரயிலின் எஞ்சின் பகுதியும் 3 பெட்டிகளும் நொறுங்கின. இந்த விபத்தில் ஒரு பெண், 8 ஆண்கள் உட்பட 11 பயணிகள் பலியாகினர் எனவும், 60 இற்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர் எனவும் பொலிஸார் முதல் கட்டமாக தெரிவித்தனர்.

இந்நிலையில், வைத்தியசாலைகளில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களில் சிலர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

ரயில் விபத்தில் பலியானோர் குடும்பத்தினருக்கு பிரதமர் இம்ரான்கான் இரங்கல் தெரிவித்தார். ரயில் பயணிகளின் பாதுகாப்பு தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு ரயில்வே அமைச்சருக்கு உத்தரவிட்டார்.

விபத்து ஏற்பட்டது தொடர்பான விசாரணைக்கும் அவர் உத்தர விட்டுள்ளார். (7)

# வீதியில் பேருந்து கவிழ்ந்து விபத்து 13 பேர் உயிரிழப்பு; 34பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் அருகே அதி வேகமாக சென்ற பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் ஸ்வாத் நகரில் இருந்து லாகூர் நோக்கி நேற்று முன்தினம் பயணிகள் பேருந்து புறப்பட்டுச் சென்றது. இஸ்லாமாபாத் அருகே ஹசன் அப்தால் என்ற இடத்தில் சென்றபோது, பேருந்து திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரப் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக் குள்ளானது.



இதில், பேருந்தில் பயணம் செய்த 13 பேர் உயிரிழந்தனர். 34 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள ஹசன் அப்தால், டெக்சிலா, வாஹ் ஆகிய பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். அதிவேகத்துடனும், கவனக் குறைவாகவும்பேருந்தை செலுத்திச் சென்றதே விபத்துக்குக் காரணம் எனப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# கிறீஸில் கடும் புயல் 100 பேர் படுகாயம்

## 6 வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் பலி

(கிறீஸ்)

கிறீஸில் வீசிய கடும் புயல் காரணமாக 100 பேர் படுகாயமடைந்தனர்.

கிறீஸின் தெசலோனிகி நகருக்கு அருகே ஹல்கிடிகி பகுதியில் கடந்தபுதன்கிழமை கடும் புயல் வீசியதுடன், ஆலங்கட்டி மழை பெய்துள்ளது.

இதன்போது ஆறு வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் உயிரிழந்திருந்ததுடன், 100 பேர் படுகாயமடைந்ததனர்.

இதனைத் தொடர்ந்து கிறீஸில் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், மீட்புப் பணியாளர்கள் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (7)





# வீரர்கள் தாக்குதல் வாதிகள் உயிரிழப்பு

## கைது

## பதுங்கு குழிகள் அழிப்பு



ஆய்வினை முன்னெடுத்த நோர்வே கடல் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள்,

'நோர்வே கடல் பகுதியில் மூழ்கியுள்ள, சோவியத் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலின் உதிரிப்பாகங்கள், காற்று வெளியேறும் பகுதி ஆகியவற்றை சேகரித்து ஆய்வு மேற்கொண்டதில், அதிலிருந்து அணுக் கதிர்வீச்சு வெளியேறுவது கண்டறியப்பட்டுள்ளது.

நோர்வே கடல் நீரில் சீசியத்தின் அளவு மிகக் குறைவு என்பதாலும், அந்த நீர்மூழ்கிக் கப்பல் மிக ஆழத்தில் இருப்பதாலும் அந்தக் கதிர்வீச்சின் சக்தி மிக வேகமாக கரைந்துவிடுகிறது. எனவே, தற்போதைய நிலையில் அங்கு கதிர்வீச்சின் அளவு அபாயகரமானதாக இல்லை' என தெரிவித்துள்ளனர்.

முன்னாள் சோவியத் யூனியனுக்குச் சொந்தமான கே-278 அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் தீ விபத்து காரணமாக கடந்த 1989 ஆம் ஆண்டு நோர்வே கடற் பரப்பில் மூழ்கியது. இந்த விபத்தில் கப்பலில் பயணித்த 69 பேரில் 42 பேர் உயிரிழந்தனர். கப்பலை இயக்கி வந்த அணு உலையும், இரு அணுகுண்டுகளும் அதிலிருந்து இதுவரையில் நீக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# ட்ரம்ப் நேர்மையானவர் அல்லர்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்!

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்க்கமான தலைவர் எனவும், நேர்மையானவர் அல்லர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க நிறுவனம் ஒன்றினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் நிறைவிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக்கணிப்பில் பங்கேற்றவர்களில் 51 சதவீதம் பேர் ட்ரம்ப் தீர்க்கமான முடிவுகள் எடுப்பவர், வலுவான தலைவர் என கூறியுள்ளனர்.

அத்துடன், பெரும்பாலானோர் அவரது நேர்மை, நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளனர்.

34 சதவீத அமெரிக்கர்கள் மாத்திரமே ட்ரம்ப் நேர்மையானவர், நம்பகத்தன்மை கொண்டவர் எனக் கூறியுள்ளதாக ஆய்வினை மேற்கொண்ட நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (7)



# இனவாத முரண்பாடுகள் தீர்க்கப்பட்டால் மாத்திரமே நாடு முன்னேறும் - சபாநாயகர்

(கொழும்பு)

**சமூகத்தின் மத்தியில் காணப்படும் இனவாத முரண்பாடுகள் தீர்க்கப்பட்டால் மாத்திரமே நாடு என்ற ரீதியில் முன்னேற முடியும் என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.**



இராணுவ வீரர் அசலக காமினியின் 28 ஆவது வருட நினைவு தின நிகழ்வு நேற்று முன்தினம் சுற்றுலாத்துறை அமைச்சில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலனித்துவ ஆட்சியில் இருந்து எமக்கு இலகுவாக சுதந்திரம் கிடைத்தமையின் காரணமாகவே சுதந்திரத்தின் மதிப்பினை பெரும்பாலும் மக்கள் அறிந்து கொள்ளவில்லை. பாரிய போராட்டத்தின் மத்தியில் சுதந்திரம் அடைந்த நாடுகள் இன்று அனைத்துத் துறையிலும் முன்னேற்றமடைந்துள்ளது.

சமூகத்தின் மத்தியில் காணப்படும் இனவாத முரண்பாடுகளை முழுமையாக இல்லாதொழித்தால் மாத்திரமே நாடு என்ற ரீதியில் நாம் முன்னேற்றமடைய முடியும். பல்வேறு தேவையற்ற காரணிகளுக்கு மாத்திரமே மக்கள் முக்கியத்துவம் வழங்குகின்றார்கள். ஜனநாயகத்தை தேர்தலில் வாக்களிப்பதால் மாத்திரம் உறுதிப்படுத்த முடியாது என்றார். (7)

# மாவனெல்ல புத்தர் சிலை உடைப்பு விவகாரம் 18 சந்தேக நபர்களும் தடுப்புக் காவலில்

(கொழும்பு)

மாவனெல்ல உள்ளிட்ட பிரதேசங்களில் ஒரே இரவில் நான்கு இடங்களில் புத்தர் சிலைகள் உடைத்து சேதமாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 18 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு மாவனெல்ல நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மாவனெல்ல உள்ளிட்ட பிரதேசங்களில் புத்தர் சிலை உடைப்பு சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 6 சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குற்றத்தடுப்பு பிரிவினரால் மாவனெல்ல நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

புத்தர் சிலை உடைப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய 12 சந்தேகநபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் சேர்த்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தேகநபர்கள் உள்ளிட்ட 18 பேரையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு மாவனெல்ல நீதவான் உபுல் ராஜ கருணா உத்தரவு பிறப்பித்துள்ளார். (7)

# ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ!

## சந்திரசேன எம்.பி. திட்டவட்டம்





(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடாக அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிறுத்தப்படுவார் என, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஒன்றிணைந்த எதிரணியில் உள்ள அனைவரினதும் ஒத்துழைப்பு இதற்கு கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (7)

# சுரக்ஷா காப்புறுதித் திட்டப் பயன்கள் விரைவில் மாணவர்களுக்கு கிடைக்கப்பெறும்

## கல்வி அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலவசக் கல்விக்கான வாய்ப்புகளை மேலும் பூரணப்படுத்தும் வகையில் மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய மாகாண மற்றும் தனியார் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் பிரதி லாபங்கள் கிடைக்கும் வகையில், சுரக்ஷா காப்புறுதித் திட்டம் அரசாங்கத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்பட்ட சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் பயன்களை அதிகளவில் மாணவர்கள் பெற்றுள்ளனர். இதன்படி சுரக்ஷா காப்புறுதி வேகமாக மாண்வர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் ஊடாக மாணவர்களின் அவசர சிகிச்சை, பெற்றோர்களின் உயிரிழப்பு போன்ற பல்வேறு பிரிவுகளின் கீழ் காப்புறுதியின் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் போதும் காப்புறுதியின் பயன்களை பெற்றுக்கொள்ள முடியும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## யார் பெரியவர்?

ஐந்து விரலும் ஒரே மாதிரியாகவா இருக்கும்? என்று ஒரு உதாரணம் சொல்லுவது உண்டு. அதாவது இந்த உலகத்திலே வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். அதற்காக ஒருத்தருக்கொருத்தர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது என்று பெரியவர்கள் சொல்லுவார்கள்.

ஒரு சமயம் இந்த ஐந்து விரலுக்குள்ளேயே சண்டை வந்து விட்டதாம். யார் பெரியவர் என்கின்ற சண்டை. கட்டை விரல் பார்ப்பதற்கு ஒரு மாதிரியாக இருந்தாலும் அது தான் முதலில் பேச ஆரம்பித்தது. உயரம் தான் அதற்கு குறைச்சலே தவிர வாய் நீளம் போல் இருக்கு. அது என்ன சொன்னது தெரியுமா?

நான் கட்டையாக இருக்கின்றேன் என்று எல்லோரும் சொல்றீர்கள். அகத்தியர் கூட என்னை மாதிரி கட்டையாகத்தான் இருந்தார். இருந்தாலும் அவருக்குள்ள சக்தி வேற யாருக்கு உண்டு? பார்வதி கல்யாணம் நடந்த சமயத்திலே எல்லோரும் வடக்கே போய் கூடி விட்டார்கள். அப்ப இந்தப் பூமியே வடக்கே அழுந்தி தெற்கே உயர ஆரம்பித்து விட்டது! அதை பலன்ஸ் செய்வதற்கு அகத்தியரை மட்டும் பரமசிவன் தெற்கே அனுப்பி வைத்தார். பூமி சமமாகி விட்டது.

அப்படி என்றால் அவரோட வெயிற் எப்படி என்று புரிந்துகொள்ள வேண்டும். அதுமாதிரித்தான் கையிலே நான் இருக்கிறேன். ஏதாவது ஒரு பொருளைத் தூக்க வேண்டும் என்றால் நான் ஒரு பக்கமும் நீங்க நாலு பேரும் இன்னொரு பக்கமும் இருக்க வேண்டியிருக்கு. அதனால் நான் தான் பெரியவன் என்றது கட்டை விரல்.

இதைக் கேட்டவுடன் மற்றைய நான்கு விரலும் சும்மா இருக்குமா? அது அதற்கென்று ஒரு கௌரவப் பிரச்சினை இருக்குத்தானே! ஆள்காட்டி விரல் நிமிர்ந்து நின்றது.

யாரை சுட்டிக்காட்ட வேண்டும் என்றாலும் நான் தான் தேவைப்படுகின்றேன். அதனால் நான்தான் பெரியவன் என்றது. அது சொல்வதும் நியாயம் தானே.

மேல் தெருவுக்கு எந்த வழியால் போக வேண்டும் என்று கேட்டால் உடனே கட்டை விரலாலேயா காட்டுகின்றோம். அப்படி என்றால் ஏதோ அபிநயம் காட்டுகிறோம் என்று நினைத்து விடுவார்கள்.

அடுத்ததாக நடுவிரல் கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளாமல் மிகவும் சாவகாசமாக எழுந்து நின்றது. என்னத்திற்கு வீணாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். எல்லோரும் எழுந்து நில்லுங்கள். யார் உயரம் என அளந்து பார்ப்போம். அப்படிப் பார்த்தால் நான் தான் பெரியவன் என்றது.

அடுத்து மோதிர விரல் சும்மா இருக்குமா? அது போட்டிருந்த தங்க மோதிரத்தை எல்லோரும் பார்க்கிறபடி அப்படியும் இப்படியும் திருப்பிக் காட்டியது. ஒரு மனிதன் வசதியானவன் எனக் காட்டுவதற்கு மோதிரம் போடுகிறான். அப்படி மோதிரம் போடுவதற்கு உங்களிடமா வருகின்றான்? என்னிடம் தான் வருகின்றான். எனக்குத் தான் போடுகின்றான்.

விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் நம்பிப் போட வைப்பதற்கு நான் தான் பொருத்தம் என்பதை மனிதனே புரிந்து வைத்திருக்கின்றான்.

இப்படி இருக்கின்ற போது நீங்கள் அதை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றால் எப்படி? என்று ஒரு அடியடித்தது மோதிர விரல்!

நான்கு விரலும் அது அதற்குப் பொருத்தமான ஒரு கருத்தை சொல்லி விட்டது. கடைசியாக இருந்தது பாவம் அந்த சுண்டு விரல் தான் பரிதாபமாக நின்றது. நான் தான் பெரியவன் என்று சொல்வதற்கு அதற்கு ஒரு கருத்தும் கிடைக்கவில்லை. அது அழுது கொண்டே கடவுளிடம் போய் விட்டது. தன்னுடைய நிலைமையைச் சொல்லியது. இதுபோல் எல்லோரும் சொல்லுகிறார்கள். எனக்கு ஒரு மாதிரியாக இருக்கின்றது என்று.

கடவுளும் அதன் காதில் இரகசியமாக ஏதோ ஒன்றைச் சொல்லி அனுப்பி வைத்தார். சுண்டு விரல் தைரியமாக திரும்பி வந்தது. மற்ற விரல்களைப் பார்த்து, உங்கள் எல்லோரையும் விட நான் தான் பெரியவன். இதிலே உங்களுக்கு சந்தேகமே வர வேண்டியதில்லை.

கோயிலுக்கப் போய் சாமி கும்பிடுகின்றோம். இரண்டு கைகளையும் கூப்பி கடவுளை கும்பிடுகின்ற போது நான் தான் உங்கள் எல்லோருக்கும் முன்னால் நிற்கின்றேன். அதனால் கடவுளுக்கு நெருக்கமாக பக்கத்திலே இருப்பது நான் தான் என்றது.

இந்தக் கருத்தை மற்ற விரல்கள் எல்லாம் ஒத்துக் கொண்டன. யார் இறைவனுக்குப் பக்கமாக இருக்கின்றார்களோ அவர்கள் தான் பெரியவர்கள். இதிலே ஒரு முக்கியமான கருத்து என்னவென்றால் சுண்டு விரலுக்கு நான் தான் பெரியவன் என்ற எண்ணம் அதற்காக ஏற்படவில்லை. அதுதான் வெற்றியின் இரகசியம்.

நான் தான் பெரியவன் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற இரண்டு ஆசாமிகள் ஒரு நாள் காலையிலே வோக்கிங் போகின்ற போது எதிரெதிரில் சந்தித்துக் கொண்டார்கள். அதிலே ஒருத்தர் கேட்டார்.

ஏன் நீ தான் வோக்கிங் போகின்றாய். இந்தக் குரங்குக் குட்டியையும் எதற்குக் கூட அழைத்துக் கொண்டு போகிறாய்? என்றார். அடுத்தவருக்குக் கோபம் வந்து விட்டது. ஏன் உனக்கு கண் தெரியவில்லையா? இது குரங்குக் குட்டியில்லை. நாய்க்குட்டி! என்றார். அதற்கு இவர்,

நான் கேட்டது உன்னிடம் இல்லை, அந்த நாய்க் குட்டியிடம் என்றார்.

### நாட்டில் பொருளாதார நெருக்கடி

# நாணய விதிச் சட்டத்தை திருத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது

## மகிந்த விடாப்பிடி

(கொழும்பு)

அரசியல் நோக்கங்களுக்காக நாணய விதிச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு இடமளிக்க முடியாது. தேவைக்கேற்ப கொண்டு வருவதாயின் பொருளாதார நிபுணர்களின் பரிந்துரைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். பொருளாதார ரீதியில் நாடு நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ள நிலையில் இவ்வாறான சட்டத்திருத்தங்கள் நிலைமையினை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் குழு அறை 7 இல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

1949 ஆம் ஆண்டு 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவந்து மத்திய வங்கியின் நாணயச் சபை உறுப்பினர் பதவியிலிருந்து திறைசேரியின் செயலாளரை நீக்குவதற்கு முயற்சிக்கப்படுகிறது. இவ்வாறு செய்வதன் ஊடாக மத்திய வங்கி தொடர்பில் திறைசேரிக்கு இருக்கும் கட்டுப்பாடு இல்லாமல்போவதுடன் , சுயாதீனமாக நாணயத்தை மத்திய வங்கி அச்சிடுவதற்கான சூழல் ஏற்பட்டுவிடும். அது மாத்திரமன்றி திறைசேரியின் செயலாளர், ஜனாதிபதியினாலேயே மத்திய வங்கியின் நாணய



சபைக்கு நியமிக்கப்படுகிறார். எனினும், திருத்தத்தின் ஊடாக அதனை ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஏற்கனவே நாடு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கும் நிலையில், நாணய நிதிச்சட்டத்தில் அரசியல் தேவைகளுக்காக திருத்தங்களை மேற்கொண்டால் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் மேலும் தீவிரமடையும் என மேலும் தெரிவித்தார். (7)

# யோஷிதவிற்கு திருமண நிச்சயதார்த்தம் நாமல் ராஜபக்ஷ டுவிட்டரில் வாழ்த்து



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித்தலைவருமான மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ஷ வுக்கு திருமண நிச்சயதார்த்தம் இடம் பெற்றுள்ளது.இதேவேளை, கடந்த ஜனவரி மாதம்இளைய மகனான ரோஹித ராஜபக்ஷவும் திருமண பந்தத் தில் இணைந்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நிதீஷா எனும் யுவதியுடன் திருமண நிச்சயதார்த்தத்தில் இணைந்து கொண்ட தனது சகோதரனிற்கு நாமல் ராஜபக்ஷ, தமது வாழ்த்துக்களை டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (7)

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் கைது

(பொகவந்தலாவ)

நுவரெலியா- பொகவந்தலாவ பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 7 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொகவந்தலாவ, டின்சின் போன்ற பகுதிகளை சேர்ந்தவர்களையே நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை பொலிஸார் கைது செய்தனர்.

நீண்ட காலமாக சுற்றுப்புறச் சூழலுக்கு தீங்கேற்படும் வகையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இதன்போது, கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளதுடன் அவர்களை ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (7)

# இலங்கையில் அமெரிக்க தள விவகாரம் உன்னிப்பாக அவதானிக்கிறது இந்தியா

(கொழும்பு)

அமெரிக்காவுடனான சோபா உடன்படிக்கைக்கு இலங்கையில் எழுந்துள்ள எதிர்ப்புகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என இந்தியாவின் எகனமிக்ஸ் டைம்ஸ் இந்தியா டைம்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவுடனான சோபா உடன்படிக்கைக்கான எதிர்ப்புகள் அதிகரிப்பதை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. இந்த உடன்படிக்கை காரணமாக இந்தியாவின் தென் பகுதியில் அமெரிக்க இராணுவத்தளமொன்று ஏற்படுத்தப்பட்லாம் என இந்தியாவின் எகனமிக்ஸ் டைம்ஸ் இந்தியா டைம்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் நெருங்கிய அயல்நாடு என்ற அடிப்படையில் இந்தியா இலங்கை எடுக்கும் முடிவை மதிக்கும் என இந்திய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் இறைமையை மீறும் விதத்தில் தனது நாடு எந்த உடன்படிக்கையிலும் கைச்சாத்திடாது என இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதை இந்தியாவின் எகனமிக்ஸ்டைம்ஸ்இந்தியா டைம்ஸ் இணையத்தளம் சுட்டிக் காட்டியுள்ளது. (7)




### நயினையின் நாயகியே

கோடான கோடி பக்தர்கள் கூடி
கொண்டாடும் நாக பூஷணியே
கேடில்லா வாழ்வை குறைவின்றி தருகின்ற
நயினை வாழ் நாக ராஜேஸ்வரியே
அலை தொட்டு செல்கின்ற கடல் நடுவே
அழகாக வீற்றிருக்கும் தாயவளே
நிறைவான மனம் வேண்டி நிற்கையிலே
உனதருளை தந்து எம்மை காப்பாயே

ச.சர்ஜீகன்
சுதுமலை.

### பாமாலை சூட்டிப் பணிகின்றேன்

சர்ப்பக் குடையின் கீழ்...
சதாசிவ லிங்கமுடன்...
சிற்பச் சிலையாகி...
சீரடியார் குறை களைந்து...
அற்புதங்கள் புரிகின்ற...
ஆதிசேடன் நாயகியே! நாகம்மா!
பொற் பாதங்கள் பணிந்தும்மை...
பூஜிக்கும் பக்தருள்ளே,
யானும் ஒருவனம்மா!
உற்சவ காலத்தில்...
உகந்த கவி புனைந்து...
கற்றவர் புகழ் தோச்சும்...
காலை வலம்புரியில் தமிழ்ச்
சொற்பதங்கள் தொகுத்துப்-பா
மாலையினை சூட்டி மகிழ்கின்றேன்! பணிகின்றேன்.

கந்தசாமி தவபாலன்
ஊர்காவற்றுறை.

### நயினை வாழ் நாயகியே!

கடல் சூழ்ந்த நயினையிலே
கருணை மழை பொழிபவளே!
ஆழ்கடல் மத்தியிலே அருளாட்சி புரிபவளே!
நாகம் குடைபிடிக்கும் நாக பூஷணித் தாயே!
நல்லருள் தந்து நிதம் காக்கும் தாயே!
வேப்பிலைக்காரியே வேண்மாரி மகமாயி
வேண்டும் வரம் அருளும் தாயே!
மாரி மகாமாரியே மாஜால மாரியே
மனையறம் காக்கும்தாயே!
வாணம் பொழியவும் பூமி விளையவும்
வரமருள் பரமேஸ்வரி
கடல்வளம் பெருகவும் பனைவளமோங்கவும்
கருணை செய் புவனேஸ்வரி!
அமுதசுரபி கொண்ட அன்ன பூரணியே
இல்லையென்றிருப்பாரை இல்லாமலாக்கிடுவாய்
கிள்ளிக் கொடுப்பாரை அள்ளிக் கொடுக்க வைப்பாய்
ஏழேழ் பிறவிக்கும் இரங்குவாய்
நயினைவாழ் ஏகாம்பரீஸ்வரியே!

கந்த பேரின்பம்
கொக்குவில்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர் ஜனாதிபதியே

## கோடீஸ்வரன் சாடல்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பிரதானமாக பொறுப்புக்கூற வேண்டியவர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் சாடியுள்ளார்.**

அத்துடன், சஹ்ரானின் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியினால் அரசாங்கத்துக்கு எதிராக கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்நாட்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் நூற்றுக்காணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த உயிரிழப்புக்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டது, என்ன காரணம் எனக் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இதனடிப்படையிலே இந்த நாட்டின் ஜனாதிபதியும் பிரதமருமே பதில்கூற கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

சர்வதேச புலனாய்வுத் துறையினர் துல்லியமான தகவல்களை எமது நாட்டின் புலனாய்வுத் துறையினருக்கு வழங்கியிருந்தனர். எனினும் இந்தத் தகவலைப் பெற்று அரசாங்கம் சரியாகச் செயற்படாத காரணத்தினால் ஏற்பட்ட இந்த இழப்புக்களுக்கு இரு தரப்பினரும் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

ஆனாலும் இதற்கான கூடுதல் பங்கை ஜனாதிபதி ஏற்க வேண்டும். ஏனென்றால் நாட்டின் பாதுகாப்புத்துறை, சட்டம் ஒழுங்கு போன்ற துறைகள் அவரிடமே இருக்கின்றன.

ஆகவே அவர் உரிய நேரத்தில் பாதுகாப்புச் சபையைக் கூட்டி நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் இந் நடவடிக்கையை மேற்கொள்ளாமல் வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார். எனவே, இந்தப் பொறுப்பை ஜனாதிபதி ஏற்கவேண்டும்.

இதேவேளை, சஹ்ரானின் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் 185 பேரே இருக்கின்றனர் என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். ஆனாலும் ஆயிரக்கணக்கில் அவர்கள் இருக்கின்றனர்" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (7)

# ஏழு மாவட்ட மக்களின் விவசாய பொருளாதாரத்தை வளப்படுத்தவும்

## ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

ஏழு மாவட்ட மக்களின் விவசாய பொருளாதாரத்தை வளப்படுத்தும் எழுச்சிபெறும் கிராமிய குளங்கள் நிகழ்ச்சித்திட்டத்தை துரிதப்படுத்தி, இன்னும் சில மாதங்களில் அதன் நன்மையை மக்களுக்கு பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.



ஜனாதிபதியின் எண்ணக்கருவான எழுச்சிபெறும் கிராமிய குளங்கள் திட்டம் பசுமை காலநிலை நிதியத்தின் 3,682 மில்லியன் ரூபா மற்றும் இலங்கை அரசாங்கத்தின் 1,250 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

2015 நவம்பர் மாதம் பிரான்ஸின் பாரிஸ் நகரில் இடம்பெற்ற ஐ.நா. காலநிலை மாற்றம் தொடர்பான உடன்படிக்கையை தொடர்ந்து அவ் உடன்படிக்கையின் அடிப்படை நோக்கமான காலநிலை மாற்றங்களுக்கு முகம்கொடுப்பதற்கான நிதி வசதிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த கோரிக்கையின் விளைவாக இத்திட்டத்திற்கு பசுமை காலநிலை நிதியத்தின் நிதியுதவி இலங்கைக்கு கிடைக்கப்பெற்றது.

இத்திட்டம் பொலநறுவை, குருநாகல், வவுனியா, புத்தளம், திருகோணமலை, மன்னார் ஆகிய 07 மாவட்டங்களையும் மல்வத்து ஓயா, மீ ஓயா, யான் ஓயா ஆகிய 03 கங்கைகளை அண்மித்ததாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

16 எல்லங்கா முறைமைகளின் 325 கிராமிய குளங்கள் மற்றும் 75 சுற்றாடல் முறைமைகளை அமைப்பதை உள்ளடக்கியுள்ளதுடன், 325 கிராமிய குளங்களை அண்மித்த 9,750 ஹெக்டெயர் நெற்பயிர்ச் செய்கையை மேம்படுத்துதல், 520,000 சிறிய ளவிலான விவசாயிகளுக்கு விவசாய காலநிலை ஆலோசனைகளை வழங்குதல், 16,677 பெண் விவசாயிகளை காலநிலைக்கு ஏற்ற விவசாயத்துறைகளில் ஈடுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை 140 குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் அவற்றை மக்களிடம் கையளிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (7)

# தலைமைத்துவத்தை ஏற்பதற்கு கரு ஜெயசூரிய தகுதியானவர்

## கூறுகிறார் ஜோன் அமரதுங்க





(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரிய எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுக்கக்கூடியவர் என்பதால் அவர் நாட்டின் தலைமைப் பதவிக்கும் தகுதியானவர் என, அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபாநாயகர் கரு ஜெயசூரியவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் ஜோன் அமரதுங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய சிறிதும் அச்சமற்ற நபர் என்றும் தெரிவித்தார். (7)

# தெரிவுக்குழுவின் நேற்றைய அமர்வு ரத்து



(கொழும்பு)

பாராளுமன்ற வளாகத்தில் நேற்றைய தினம் கூடவிருந்த பாராளுமன்ற தெரிவுக்குழு அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் 24 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

தெரிவுக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்த விசாரணையாளர்கள் சிலர் வெளிநாட்டு விஜயத்தில் இருப்பதாலும் சிலர் விசாரணை அமர்வுகளுக்கு வரமுடியாத வேறு காரணங்களை கூறியுள்ளதனாலும் தெரிவுக்குழு அமர்வுகளை நிறுத்த குழு தீர்மானம் எடுத்துள்ளது. அடுத்த மாதம் இறுதிக்குள் பிரதமர் உள்ளிட்ட முக்கிய நபர்களை அழைத்து விசாரணை நடத்தி அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவுக்குழு தலைவர் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்தார். (7)

# நாட்டின் தேசிய பாதுகாப்பு முழுமையாக பலப்படுத்தப்பட்டுள்ளது -ருவான் விஜயவர்தன

(கொழும்பு)

தேர்தல் நெருங்கும் சமயத்தில் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கு பங்கம் விளைவிக்கும் நோக்கிலே தேசிய பாதுகாப்பு பலவீனம் அடைந்துள்ளதாக குற்றச்சாட்டை எதிர்த்தரப்பினரால் முன்வைப்பதாக குறிப்பிட்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன, நேற்று முன்தினம் தேசிய பாதுகாப்பு முழுமையாக பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இராணுவ வீரர் அசலக காமினியின் 28 வது வருட நினைவு தின நிகழ்வு நேற்று முன்தினம் சுற்றுலாத்துறை அமைச்சில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



களுத்துறை தொடக்கம் காலி பிரதேசம் வரையில் வான் மற்றும் தரைவழிகளின் தாக்குதல்கள் நடத்த அடிப்படைவாத அமைப்பு திட்டமிட்டுள்ளதாக பொய்யான செய்தி சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் வதந்திகளை பரப்புவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். மக்களை அச்சத்துக்குள்ளாக்கும் போலியான செய்திகளை பரப்புவதை ஒரு தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (7)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—177

# துணிப்பைகளில் பொருள்வாங்கும் கலாசாரத்துக்குள் மாறவேண்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மாற்றம் என்று ஒன்றில்லையெனில் உலகில் எதுவுமே நடக்காது. காலநேரத்திற்கேற்ப மாற்றங்கள் உலகில் நடந்தேறியே ஆக வேண்டும் என்பது நியதி. ஆயின் காலநிலை மாறத் தொடங்கிவிட்டது. சூழலும் மாறத்தலைப்பட்டுவிட்டது. இவையனைத்திற்கும் காரணமான மனிதன் இன்னும் மாறவில்லை. மாறியதுபோல நடிக்கத் தொடங்கிவிட்டான். மகாநடிப்பு இது. அதுவும் வார்த்தைகள் இலவசமாக வருகின்றது என்பதனால் அள்ளி வீசுவதிலேயே பலர் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். எதுவும் இலவசமாக வந்தால் பிரச்சினையையும் சேர்த்துகொண்டு வருகின்றது எனப்பொருள். இலவசமாக வருகின்றதென்பதால் அவ்வளவு அலட்சியமாக நாம் இருந்துவிடக் கூடாது. ஏனெனில் இலவசமாக வருவதற்குரிய பெறுமதியை அதுபெற்றே வருகின்றது என்பதனை நாம் மறந்துவிடுகின்றோம். மனம் தானே இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம். மனதை மாற்றிக்கொள்ளக்கூடியவர்கள் தான் வெற்றியாளர்களாக உயர்ந்திருக்கின்றார்கள். இங்கே ஒரு மாற்றம் வேண்டும். எம்மவர்களால் இது ஆகக்கூடியதாக இருக்கக்கூடிய மாற்றம். பொலித்தீன் பைகளையோ சொப்பிங் பைகளையோ பயன்படுத்துவதில்லை என்னும் மாற்றம். சனத்தொகை கூடியதேசத்திலும் வசதியுள்ளதேசத்திலும் இவ்விரண்டையும் அவசியதேவை கருதி பயன்படுத்துவதில் அப்பிரதேசத்து மக்களே மட்டுப்படுத்தியிருப்பது சாத்தியமென்றால் ஏன் எங்களால் முடியாது? யாழ்ப்பாண மாநகர சபை முதலில் இதற்கு உதாரணமாக இருக்காதா? நகர குப்பைகளை விரைந்து அகற்றும் நடவடிக்கையில் இதற்கு முதலிடம் கொடுக்கலாமே!

குப்பைகளை மீள்சுழற்சி செய்தல் என்பது நீண்டகாலமாக நாம் நடைமுறைப்படுத்தி வருகின்றதென்றாலும் அதில் எத்தனை சதவீதம் மீள்சுழற்சி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது என்பது ஒரு கேள்விக்குறி. இதனை ஒரு பிரகடனமாக மாற்றி அனைவரையும் இந்த மீள்சுழற்சி செய்தலுக்குள் உள்வாங்க வேண்டும். சேதனப் பொருட்களை மீள்சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தும் கலாசாரத்திற்குள் நாமனைவரும் முன்வரவேண்டும். வெறுமனே இதனை வாசித்துவிட்டு போகின்றவர்களுக்காக இந்த வேண்டுகோளினை விடுக்கவில்லை. உண்மையிலே வாசித்தவுடன் அதனை நடைமுறைப்படுத்தி அந்தச் செய்தியின் பயனை அடைகின்ற ஒவ்வொருவரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர். நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் மாணவர்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள். எங்களால் செய்யக்கூடிய இந்த காரியத்தை செய்துதான் பார்ப்போமே. நகரை சுத்தமாக வைத்திருக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உரியது. இதில் தட்டிக்கழிக்கும் பழக்கத்தை நடைமுறைப்படுத்திப் பார்க்கக் கூடாது.

சேதனப்பொருட்களில் இலகுவாக உக்கக்கூடிய பைகளை உற்பத்தி செய்வதனால் சந்தையில் கடைகளில் இவ்வாறான பைகள் புழக்கத்திற்கு வந்துவிடும். இவ்வாறானவற்றை விலை குறைந்ததாக நுகர்வோர் விரும்பி வாங்கும் பொருளாக மாற்றினால் குப்பையின் பிரச்சினையை ஓரளவிற்கு தீர்த்துக்கொள்ளலாம். வாழை நாரிலிருந்த பைகள், பனையின் ஓலையிலிருந்து பைகள், கமுகுமர இலை மடலிலிருந்து உணவுண்ணும் கோப்பைகள், பேணிகள் எனப் பல வகையான பொருட்களிலிருந்து எமது பிரதேசத்தில் உற்பத்தியாகின்றதனை அறியலாம். இருப்பினும் இந்தப் பயன்பாட்டை மேலும் விரிவுபடுத்த வேண்டும். புத்தாக்கங்களும் புதியனவற்றை தேடலும் இதற்கு பதில் சொல்லும். பாடசாலை மாணவர்களின் புத்தாக்கத்தை ஊக்குவிக்கும் செயன்முறையாக இவ்வாறான கழிவுகளை மீள்சுழற்சி செய்யும் தொழில்நுட்பங்களை கண்டுபிடிக்கலாம். மாறாக துணிப் பைகள் போன்று வேறு சேதன தாவர மீதிகளால் உருவாக்கக்கூடிய பைகளையும் அறிமுகப்படுத்தலாம்.

பேப்பர் பைகள் மற்றும் தேநீர் கப்புகள் புழக்கத்தில் இருந்தாலும் இன்னும் புதுமைகளுக்கு இடமிருக்கின்றது. இதற்குரிய ஊக்கத்தைக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்கள் இதற்கு முதலிடம் கொடுத்தால் நாம் எதிர்பார்க்கின்ற நல்ல மாற்றங்கள் எமது பிரதேசத்தில் நடந்தேறும்.

சேதனக் கழிவுகளை மீள்சுழற்சி செய்து மீண்டும் பாவனைக்கு எடுக்கச்செய்தால் இருக்கின்ற வளத்தை வைத்துக்கொண்டு விலை குறைவான பொருட்களை உற்பத்தி செய்து கொள்ளலாம். எமது பிரதேசத்தில் காணப்படும் வளரக்கூடிய தாவரங்களிலிருந்து விதம் விதமான பைகளை உற்பத்தி செய்யும் தொழிற்றுறை இங்கே உருவாக வேண்டும். இது காலத்தின் தேவை.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 191




யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்களினால் வர்த்தக கருத்தரங்கு நேற்றைய தினம் அங்குரார்ப்பணம் ஒழுங்கு செய்யப்பட்டு இன்று இரண்டாவது நாளாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் இன்னும் வடபுலத்தின் தேவைகளைப் புரிந்துகொண்டதால் இந்த கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறான கருத்தரங்குகள் எம்மவரின் சிந்தனையை தூண்டிவிடுவதற்காகவும் அதன்மூலம் புத்தாக்கங்கள் புதிய விடயங்கள் கிடைக்க வழிகிடைக்கும். வடமாகாணத்தில் தொழில்சார் நடவடிக்கைகளுக்கு இவ்வாறான கருத்தரங்குகள் முயற்சிக்க வேண்டும். வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு இதில் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு வழிபிறக்க வேண்டும். வர்த்தகத்துறையின் வளர்ச்சி எமது மாகாணத்தின் அபிவிருத்தியுடனான வளர்ச்சிக்கு வழிவகுக்கும். வாழ்வாதாரம் சிறக்க வர்த்தகத்துறை அபரிமிதமான வளர்ச்சிக்குள் உள்ளீக்கப்படல் வேண்டும்.

சுற்றுலாத்துறையின் விருத்தி அவசியமாக தேவைப்படுகின்ற விடயமாகும். இங்கே நாம் கூறியிருப்பது சுற்றுலாத்துறையேயன்றி உல்லாசத்துறையல்ல. எமது கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் செயற்பாடுகளுக்கு சுற்றுலாத்துறை முதன்மையிடம் கொடுக்குமாயின் மற்றைய பிரதேசங்களில் இருப்பவர்களையும் சுற்றுலாத்துறைக்கு முதலிடம் கொடுக்க அழைக்க வழியுண்டு. அதனுடனிணைந்த சுற்றுலாவுக்கான உபசேவைகள் விருத்தியடைந்தால் இளையவர்ளுக்கான வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும். பல பட்டதாரிகள் க.பொ.த உயர்தரத்தில் கல்விகற்று பல்கலைக்கழக பட்டதாரிகளை ஒன்றிணைத்து இது விடயமாக கலந்துரையாடுவது நல்லது.

கிராமங்களிலுள்ள வளங்களை முறையாக மதிப்பீடு செய்து ஒவ்வொரு கிராமத்திற்கும் அதற்கேற்ற தொழிற்றுறையை உருவாக்கலாம். இதற்காக கிடைக்கின்ற விஞ்ஞான தொழில்நுட்பத்தை கிராமத்தை நோக்கி நகர்த்துதல் அவசியமாகும். எமது கிராமங்கள் அனைத்தும் தொழில்நுட்ப கிராமங்களாக பரிணமித்தால் எமது பொருட்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் பலாலி விமான தளம் மற்றும் காங்கேசன்துறை கப்பலண் தளம் விரைந்து இந்த பொருட்களின் ஏற்றுமதிக்கு வழிவிட்டால் வடமாகாணத்தின் GDP விரைந்து உயர்வு காணும். இந்த மாற்றத்தினையும் அனைவரும் காண ஆவலாயிருக்கின்றோம்.

அன்றாடம் நாம் பயன்படுத்திவிட்டு அவற்றை எறிந்துவிடுகின்ற பழக்கத்தை நாம் கடைப்பிடித்தால் பல நகரக்குப்பைகள் வீதிக்கு வரமாட்டா. சேதனக்கழிவுகளை முதலில் மீள்சுழற்சி செய்வதனை முழுமையாக கவனத்திலெடுக்கும் அதேநேரத்தில் பொலித்தீன், சொப்பிங் பைகள், சாப்பாடு சுற்றும் பொலித்தீன் பைகள் எனப் பலவற்றுக்கு விடை கொடுக்கலாம். இது தனிமனித முயற்சியல்ல. அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கால சந்ததிக்காக செய்யும் கடமை எனக் கொள்ளலம். நாமும் வாழ்ந்து மற்றையவர்களையும் வாழவைப்போம். மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் இது சமர்ப்பணம்.

## அவன்கார்ட் விவகாரம்

# கோத்தாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

சர்ச்சைக்குரிய அவன்கார்ட் சம்பவம் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கை கொழும்பு நீதவான் நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

அவன்கார்ட் மெரியட் நிறுவனத்திற்கு மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையை நடத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கியதன் ஊடாக அரசாங்கத்திற்கு 1140 கோடி ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தான் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது, வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் 20 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதன்போது, இந்த வழக்கை விசாரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருப்பதாகவும் இதன் காரணமாக மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை வழக்கை ஒத்தி வைக்குமாறும் முறைப்பாட்டாளர் மற்றும் பிரதிவாதிகள் சார்பில் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# நிதி மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டவர் கைது

(கொழும்பு)

நாரம்மல பகுதியில் நிதி மோசடி சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் கொழும்பு மோசடி விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். சுமார் 20 இலட்சம் ரூபாய் நிதி மோசடி தொடர்பிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 54 வயதுடைய பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)



# ருவான் விஜயவர்த்தன பதவிவிலக வேண்டும்

## முஜிபுர் பாராளுமன்றில் வலியுறுத்து

(கொழும்பு)

அதிகாரம் எதுவும் இல்லாது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவியிலிருக்கும் ருவான் விஜயவர்த்தன பதவி விலக வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று முன்தினம் பாராளுமன்றில் வலியுறுத்தினார்.

அத்துடன் கடந்த ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற அரசியல் மாற்றத்தின் பின்னர் ஜனாதிபதி மீண்டும் எங்களிடம் ஆட்சியை ஒப்படைத்தாலும் எம்மிடமிருந்த சட்டம் ஒழுங்கு அமைச்சை தன்னிடம் வைத்துக்கொண்டார். அரசியல் செய்வதற்கே இதனை அவர் வைத்துக்கொண்டிருக்கின்றார். இந்த அமைச்சு இல்லாமல் அரசாங்கம் முன்செல்வது பயனில்லை என்றும் தெரிவித்தார். (7)

# கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்திற்கு முழு அதிகாரம் கொண்ட கணக்காளர் நியமனம்

## மக்கள் மகிழ்ச்சியில் கொண்டாட்டம்!

(கல்முனை)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு முழு அதிகாரம் கொண்ட கணக்காளர் நியமிக்கப்பட்டதற்கு கல்முனையில் மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடியுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதாக கூட்டமைப்பிடம் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக சகல அதிகாரமும் கொண்ட நிதிப் பிரிவு உருவாக்குவதற்கான நடவடிக்கையினை எடுத்துள்ளதுடன் சகல அதிகாரம் கொண்ட கணக்காளரை நியமிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதனை வரவேற்று நேற்று முன்தினம் மாலை கல்முனை மாநகரில் இளைஞர்கள் பட்டாசு கொளுத்தி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதன்போது கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை தரமுயர்த்துமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுவந்த கல்முனை மாநகரசபை உறுப்பினர் ராஜனும் பங்குகொண்டதுடன் அவரை இளைஞர்க்ள் தூக்கி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.



அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட நகர்வு காரணமாக இந்தக் கணக்காளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1775

### குபேரன்




### ஜனனி




### ஆரோகி




### கவிதா




### மோகன்




### ஹம்சிகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சுவிஸில் இடம்பெற்ற விபத்தில் இலங்கைத்தமிழ் இளைஞன் பலி!





(சூரிச்)

சுவிஸில் இடம்பெற்ற விபத்தில் இலங்கைத் தமிழ் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சுவிஸின் **Waldstatt a Töfffahrer** பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட ரதீபன் ரவீந்திரன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில். குறித்த இளைஞர் சம்பவ இட த்திலேயே உயிரிழந்த தார்.

விபத்துக் குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7)

# தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் சஹ்ரானின் தாக்குதலுக்கும் வித்தியாசம் இல்லை

## விமல் வீரவன்ச கடும் சாடல்

(கொழும்பு)

**அரசாங்கத்தின் வரி விதிப்புக்கும், சஹ்ரானின் பயங்கரவாதத் தாக்குதலுக்கும் வித்தியாசமில்லை எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கடுமையாகச் சாடினார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதத்தின் போது மேற்கண்டவாறு சாடினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கியூபாவைச் சேர்ந்த தோழர் பிடல் காஸ்ட்ரோ 'கியூபாவில் புரட்சியாளர்களான எங்கள் கையில் பலவிதமான தவறுகள் இடம்பெற்றிருக்கின்றன. எதிர் காலத்திலும்தவறுகள்இடம்பெறலாம். ஆனால் தேசத் துரோகம் என்னும் செயல் மாத்திரம் எங்களால் தவறிக்கூட மேற்கொள்ளப்படவில்லை' என்று தெரிவித்துள்ளார்.

அவ்வாறே, அரசியல் ரீதியாகவோ, இடதுசாரிக் கொள்கையின் போதோ, தேசியவாத செயற்பாடுகளின் போதோ எங்களால் பல தவறுகள் இழைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் தேசத் துரோகியாக இல்லாத பட்சத்தில் மாத்திரம் நாங்கள் குற்றமற்றவர்களாக இருக்க முடியும்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி அரசியல் மாற்றத்திற்கு காரணமாக இருந்த மக்கள் விடுதலை முன்னணி, அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தில் ஊழல்களை விசாரணை செய்யும் பெரும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது.

இந்தத் தேசத்துரோக அரசாங்கத்தை நிர்மாணிப்பதற்கு மிக முக்கிய பங்காற்றிய அந்தக் கட்சி, அண்மையில் 51 நாட்கள் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை பெற்றுக் கொடுப்பதற்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது.

சஹ்ரான் போன்ற பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் காரணமாக நாட்டின் அனைத்துத் துறைகளும் ஸ்தம்பித்து இருக்கின்றன. அதேபோன்றுதான் இந்த அரசாங்கமும் மலைபோன்று வரிகளை விதித்து பொதுமக்களின் மீது சுமைகளை ஏற்றி வைத்திருக்கின்றது.

பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு நிகராகச் செயற்படும் இந்த அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் எவ்வாறு நம்பிக்கை வைப்பது" என்று அவர் மேலும் கேள்வியெழுப்பியுள்ளார். (7)

# பேஸ்புக் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் கடந்த 10 ஆம் திகதி பேஸ்புக் இந்தியா நிறுவனத்தின் மாநாடு ஒன்று இடம் பெற்றுள்ளது.

இலங்கை உட்பட பல உலக நாடுகளில் பேசப்படும், வெறுப்பூட்டும் பேச்சுக்களை கட்டுப்படுத்த இணையவெளி துஷ்பிரயோகங்களைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பேஸ்புக் நிறுவனம் அறிவித்துள்ளது.

வெறுப்பூட்டும் பேச்சுக்களை பரப்பிய 40 இலட்சம் பேஸ்புக் கணக்குகள் நீக்கப்பட்டுள்ளதாகவும் பேஸ்புக் நிறுவன இந்தியத் தலைமையகத்தின் அதிகாரிகள் இந்நிகழ்வில் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத நிகழ்ச்சி நிரல்களை ஊக்குவிக்கும் 64 இலட்சம் முகநூல் கணக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இம் மாநாட்டில் பேஸ்புக் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# செய்தித்துளிகள்

## 60 கிலோகிராம் ஹெரோயினுடன் 9 பேர் கடற்படையினரால் கைது




(காலி)

காலித் துறைமுகத்திற்கு அண்மித்த கடற்பரப்பில் வெளிநாட்டுப் படகொன்றிலிருந்து 60 கிலோ கிராம் ஹெரோயினை இலங்கைக் கடற்படையினர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் குறித்த படகிலிருந்த 9 பேரையும் கைது செய்துள்ளதாகவும், அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (7)

## வைத்தியர் ஷாபிக்கு மறியல்

(குருநாகல்)

குருநாகல் மாவட்ட வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபியை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க குருநாகல் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. வைத்தியர் ஷாபி விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் குருநாகல் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்த நிலையில் சி.ஐ.டியினர் விஷேட விசாரணை அறிக்கை ஒன்றை குருநாகல் நீதிமன்றில் முன்வைத்தனர்.

இதையடுத்து வைத்தியர் ஷாபி நேற்று முன்தினம் முற்பகல் குருநாகல் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்நிலையில் அவரின் மூன்று மாத கால தடுப்புக் காவல் உத்தரவை சட்டமா அதிபர் திணைக்களம் மீளப் பெற்றதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து வைத்தியரை தடுத்துவைக்க போதியளவு காரணங்கள் இல்லையென பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சிங்கள அமைப்புக்கள் சில நீதிமன்ற வளாகத்தில் கூடி வைத்தியரின் விடு தலையை எதிர்த்தபடி கருத்துக்களை ஆங்காங்கே வெளியிட்டு வந்ததால் அங்கு ஒருவித பதற்றநிலை ஏற்பட்டது. இதையடுத்து குறித்த வைத்தியரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 420 | 600 |
| தக்காளி | 120 | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 120 | 120 |
| கோவா | 80 | 80 | 60 | 80 |
| கரட் | 140 | 160 | 120 | 200 |
| பூசணி | 100 | 130 | 80 | 100 |
| புடோல் | 80 | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 100 | 120 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 80 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 110 | 130 |
| பாகற்காய் | 200 | 180 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 140 |
| லீக்ஸ் | 120 | 90 | 80 | 100 |
| பீற்றுட் | 100 | 60 | 60 | 100 |
| கறிமிளகாய் | 200 | 140 | 220 | 280 |
| முருங்கைக்காய் | 160 | 160 | 150 | 120 |
| போஞ்சி | 160 | 140 | 110 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | 120 |
| கீரை – 1பிடி | 40 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 200 | 250 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 180 | 100 | 140 |
| வெங்காயப்பூ | 240 | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 40 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 110 | 50 |




# பூக்களுக்கும் போட்டி உண்டு



குட்டீஸ் நீங்கள் பூங்காவிற்குச் சென்றிருக்கிறீர்களா? அங்கு விதம் விதமான மலர்களை பார்த்திருப்பீர்கள். அவைகள் ஒவ்வொன்றும் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கின்றன. நீங்கள் அதை பார்த்து ரசித்திருப்பீர்கள். அப்பொழுது அங்குள்ளதிலேயே எந்தப் பூ அழகு என்று பேசிக்கொண்டிருப்பீர்களா? கண்டிப்பாக செய்திருப்பீர்கள்.

இப்படித்தான் ஒரு நாள் குழந்தைகள் சிலர் பூங்காவை சுற்றிப்பார்க்க வந்திருந்தனர். அங்குள்ள மலர்களை பார்த்து ஒரே சந்தோசக் கூச்சலிட்டனர். மலர்களுக்கும் குழந்தைகளைப் பார்த்தவுடன் மகிழ்ச்சி தாங்கவில்லை. என்னைப் பார் என்னைப் பார், என்று காற்றில் தலை சாய்த்து தன் மகிழ்ச்சியை தெரியப்படுத்தினர். எல்லாம் பார்த்துவிட்டு செல்லும்போது ஒரு குழந்தை எனக்கு ரோஜா பூக்கள் தான் பிடித்திருக்கிறது என்று சொல்லிவிட்டுச் சென்றது.

இதை கேட்டவுடன் மற்ற பூக்களுக்கு வருத்தம் வந்து விட்டது. ரோஜா பூவுக்கோ மகிழ்ச்சி தாங்கவில்லை. பார்த்தீர்களா உங்களிலேயே நான் எவ்வளவு அழகானவன் என்று தெரிந்து கொண்டீர்களா? என்று மற்ற மலர்களை பார்த்து கேட்டது. மற்ற பூக்கள் தலை குனிந்து கொண்டன.

மறுநாள் இதேபோல இன்னும் சில குழந்தைகள் அந்தப் பூங்காவை சுற்றிப்பார்க்க வந்தனர். அவர்களும் அங்குள்ள மலர்களைக் கண்டு கழித்து விட்டு இங்குள்ள பூக்களிலே மல்லிகைப் பூக்கள் தான் அழகாக இருக்கின்றன. என்று சொல்லி விட்டுச் சென்று விட்டனர். இதை கேட்டதும் மல்லிகைக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. ரோஜா தலை குனிந்து கொண்டது.

அடுத்த நாள் வந்தவர்கள் செவ்வந்தி மலர்கள் அழகு என்று சொல்லிச்சென்றனர்.

அதற்கு அடுத்த நாள் வந்தவர்கள் குளத்திலுள்ள தாமரை மலர்கள் தான் அழகு என்று சொல்லி விட்டு சென்றனர். இப்படி தினம் தினம் வருகிறவர்கள் ஒவ்வொரு மலர்களை அழகு என்று சொல்லி விட்டுச் சென்றனர். இதனால் அங்குள்ள மலர்களுக்குள் ஒரு போட்டியே வந்து விட்டது.

அங்குள்ள மலர்ச்செடிகளை தினமும் பராமரித்து வருபவன் பெயர் முருகன். அவன் தினமும் ஒவ்வொரு செடிகளாய் கவனித்து அதற்கு மண் அணைத்து தண்ணீர் விட்டு பராமரித்து வந்தான். அவன் நாள்தோறும் இந்த மலர்களுடனே இருப்பதால் அதோடு பேச முடியாதே தவிர அதனுடைய தோற்றத்தை வைத்து அந்த செடி எப்படி உள்ளது என்று கண்டு பிடித்து விடுவான். அப்படி இந்த ஒரு வார மாய் பார்க்கும்பொழுது ஏதோ ஒரு மலர்ச்செடி மட்டும் செழுசெழுவெனவும் மற்ற மலர்ச்செடிகள் வாடிப் போயும் இருப்பதாக அவன் மனதுக்கு தென்பட்டது. காரணம் புரியாமல் விழித்தான்.

ஒருநாள் அந்த மலர்ச் செடிகளின் வேர்களுக்கு மண் அணைத்து தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும்போது ஒருசிலர் அந்த மலர்ச் செடிகள் அருகே வந்து ரசித்துக் கொண்டிருந்தனர். பின் அவர்கள் போகும்போது சூரியகாந்தி மலர்கள் தான் இங்குள்ளதிலே அழகு என்று சொல்லிச் சென்றனர். அது இவன் காதிலும் விழுந்தது. அவன் மண் அணைத்துக் கொண்டிருந்த அந்த மலர்ச் செடி சட்டென வாடுவதை கவனித்தான். உட்கார்ந்திருந்தவன் எழுந்து மற்ற மலர்ச்செடிகளை பார்க்க அவைகளும் வாடி இருப்பது போல் அவனுக்குப்பட்டது. சூரியகாந்தி செடி மட்டும் கொஞ்சம் பிரகாசமாய் இருப்பதாகப்பட்டது. அவனுக்கு இலேசாக உண்மைகள் தெரிய ஆரம்பித்தன.

மறுநாள் ஒரு பகுதியினர் மலர்ச்செடிகள் இருக்கும் இடத்துக்கு வந்து ரசித்துப் பார்த்தனர். அவர்களுக்கு மிகவும் பிடித்து விட்டது. இங்குள்ள எல்லா மலர்களும் எவ்வளவு அழகாக இருக்கின்றன. அதைவிட அந்த மலர்களை தாங்கி நிற்கும் செடிகளும் எவ்வளவு கம்பீரமாய் நிற்கின்றன. இவ்வளவு பெரிய செடிகளை தாங்கி நிற்கும் இந்த வேர்கள் கூட எவ்வளவு உறுதியாய் இருக்க வேண்டும் என்று பேசிக் கொண்டு சென்றனர். இதை கேட்ட மலர்களுக்கு அப் பொழுதுதான் உறைத்தது. நம்மை மட்டுமே அழகு என்று நினைத்துக்கொண்டிருந்தோம். நம்மை தாங்கிக் கொண்டிருக்கும் தண்டு, இலை, வேர் இவைகள் கூட அழகுதான். இவைகள் இல்லாவிட்டால் நாம் இல்லை என்று உணர்ந்து கொண்டது.

இப்படி தினமும் பூங்காவைப் பார்க்க வந்தவர்கள் எல்லாப் பூக்களும் செடிகளும் அழகு என்று சொல்லி செல்வதால் எல்லா மலர்ச்செடிகளும் செழிப்பாக இருந்தன. இதற்கு காரணம் முருகன் தான். அவன் மலர்ச்செடிகளை பார்க்க வருபவர்களிடம் முன்னரே நீங்கள் தயவு செய்து எல்லா மலர்களையும் பாராட்டிச் செல்லுங்கள் என்று கேட்டுக்கொள்வான்.

இதனால்மலர்கள்கொஞ்சம் கொஞ்சமாக போட்டி பொறாமைகளை மறந்தன. நீங்கள் எப்படி குட்டீஸ், பூங்காவுக்கு சென்றால் அங்குள்ள எல்லாவற்றையும் பாராட்டுவீர்களா?

## விடுகதைளும் விடைகளும்

- தலைகீழாய் தொங்குவான், தலையைசைத்தால் தென்றல் தருவான். அவன் யார்?

**மின் விசிறி**

- அன்பால் மலரும் பூ, அனைவரும் விரும்பும் பூ, மனிதன் உதட்டில் மலரும் பூ. அது என்ன பூ?

**சிரிப்பு**

- கல்லாலும் மண்ணாலும் கட்டாத வீடு, கதவு இல்லாத வீடு காற்றினிலே ஆடும் வீடு. அது என்ன?

**தூக்கணாங் குருவிக்கூடு**

- கடல் நீரால் வளர்வான், மழை நீரால் ம்டிவான். அவன் யார்?

**உப்பு**

- திரி இல்லாத விளக்கு, திரிலோகம் எல்லாம் தெரியுதாம். அது என்ன?

**சூரியன்**

## பொது அறிவு

- ஒரு தேனீயால் எத்தனை முறை கொட்ட முடியும் ?

**ஒரே ஒரு முறை**

- மின் தடையை கண்டுபிடித்தவர் யார் ?

**ஓம்**

- முகப்பவுடரை கண்டுபிடித்த நாடு எது ?

**இத்தாலி**

4. கிரிக்கெட் விளையாட்டு எங்கு தோன்றியது ?

**இங்கிலாந்து**

- வெப்பநிலை மானியை கண்டுபிடித்தவர் யார் ?

**சிக்ஸ்**

- சட்டையை கண்டுபிடித்தவர்கள் யார் ?

**எகிப்து நாட்டவர்கள்**

வெற்றி இறுதியுமல்ல தோல்வி முடிவுமல்ல தொடர்வதன் துணிவே பெரிது ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# விசேட நாட்கள் பற்றி கவனம் செலுத்துங்கள்

வாழ்க்கை என்பது வாழ்வதற்கானது. ஏழ்மையிலும் மகிழ்வோடு வாழ்வதையே வாழ்க்கை என்கின்றோம்.

முன்பெல்லாம் எங்கள் மூதாதையர்கள் வாழ்க்கையை மகிழ்வாக அனுபவித்தனர். மற்றவர்களுக்கு கொடுத்து மகிழ்ந்தனர்.

ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பைத் தங்கள் இழப்பாகக் கருதி ஊர் கூடி உறவு கூடி நாங்கள் இருக்கின்றோம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி பக்கபலமாக இருந்தனர். அந்த ஒற்றுமை இன்று ஏது என்றாயிற்று.

மனித வாழ்வு என்றும் சிறப்பாகவும் மகிழ்வாகவும் அமைய வேண்டும் என்பதற்காகவே கோயில் திருவிழாக்களும் விசேட உற்சவங்களும் பண்டிகைக் கொண்டாட்டங்களும் வகுக்கப்பட்டன

ஊர் கூடித் தேர் இழுப்பது முதல் பெருந்திருவிழாக்களில் அந்தத் தேசமே கூடி வழிபாடாற்றுகின்ற வழமைகள் மனித வாழ்க்கையைச் செழுமைப்படுத்துவதற்கானவை.

ஆனால் இன்று அந்த நிலைமை அடியோடு இல்லாமல் போய்விட்டது.

படிப்பு என்ற அளவுக்கு மிஞ்சிய செயற்பாடு மனித மனநிலைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது.

பணம் உழைப்பது மட்டுமே படிப்பின் நோக்கம் என்று நினைத்தபோது, எங்கள் மனித வாழ்வின் அத்தனை அடிப்படைப் பண்பாடுகளையும் நாம் இழக்க வேண்டியதாயிற்று.

நம்மைப் பொறுத்தவரை வடக்கு மாகாணத்தின் கல்வி வீழ்ச்சிக்கான முதன்மைக் காரணம் படிப்பைச் சுமையாக்கிவிட்டதுதான்.

காலை எழுந்தவுடன் ரியூசன். பின்னர் பாடசாலை தொடர்ந்து தனித்தனிப் பாடங்களுக்காக ஓடித் திரிகின்ற நடைமுறைகள் என்பன சுயகற்றலை வேரறுத்து விட்டது.

சுயகற்றலை இழந்தபோது, சிந்திக்கின்ற ஆற்றலும் அதனூடு உருவாகும் ஆளுமையும் அறுபட்டுவிட்டன.

இதுவே எங்கள் வடமாகாண கல்வி வீழ்ச்சியின் மூலகாரணம். எனினும் எங்கள் கல்விச் சமூகம் இன்னமும் மாதிரிப் பரீட்சை நடத்துவது பற்றியே சிந்திக்கின்றது.

என்ன செய்வது படிப்பு படிப்பு என்ற திணிப்பு எங்கள் பிள்ளைகளின் மலர் போன்ற மனங்களைச் சிதைத்துவிட்டது.

இதனால்தான் இன்றைய மாணவர் சமூகம் ஆலய வழிபாடு பற்றி, ஆன்மிக நாட்டம் பற்றி, பெரியோரைக் கனம் பண்ணுவது பற்றி, அடுத்தவரின் அவலம் பற்றி எந்தச் சிந்தனையும் இல்லாமல் முகநூலில் தங்களைப் புதைத்துக் கொண்டு ஆறுதல் தேடுகின்றனர்.

இந்த அவலம் என்று தீருமோ என்று ஏங்குகின்ற அதேநேரம்,

நயினாதீவு நாகபூசணி அம்மன் தேர், ஆடி அமாவாசை விரதம் போன்ற விசேட தினங்களில் கவனம் செலுத்தி பரீட்சைகளைத் தவிர்த்து முடிந்தால் விடுமுறை வழங்கி சமூக உறவை வளர்க்கவும் ஆன்மிக நாட்டத்தை ஏற்படுத்தவும் நன்றிக் கடனைச் செலுத்தவும் வழி செய்ய வேண்டும். இது மிக மிக அவசியமாகும்.

# கூட்டமைப்பின் ஆதரவின்றி நம்பிக்கையில்லா தீர்மானத்தை அரசால் வெற்றி பெற்றிருக்க முடியாது

## டிலான் பெரேரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் ஆதரவு காரணமாகவே அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது என மகிந்த அணி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம் பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பின் போதே மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'கூட்டமைப்பின் ஆதரவு இல்லாவிட்டால் நிச்சயமாக அரசாங்கத்தால் வெற்றிபெற்றிருக்க முடியாது.

மீண்டும் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுமாக இருந்தால் அதனூடாக ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயமாக தோற்கடிப்போம்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் 70 வீத வாக்குகளை பெற்றுக் கொள்ளக்கூடிய ஒருவராக இருக்க வேண்டும்.

அவ்வாறாயின் அவர் 65 இலட்சம் வாக்குகளை பெற்றுக்கொள்ள கூடிய ஒருவராக இருக்க வேண்டும். கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலின் போது கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் இந்த 65 இலட்சம் வாக்குகளை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதை மிக இலகுவாக தீர்மானிக்க வேண்டும்.

இறுதியாக இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு மாத்திரம் 50 இலட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

ஆகவே 50 வீதமான வாக்குகளை பொதுஜன முன்னணியால் பெற்றுக் கொள்ள முடியும். இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் சுந்திர கட்சியும் இணைந்து போட்டியிடுமாக இருந்தால் நிச்சயமாக தேர்தல் எங்களுக்கு சாதமாகவே அமையும்' என குறிப்பிட்டார். (ம-3)

# தீர்மானங்களை சரியாக எடுக்க வேண்டும்-சஜித்

(கொழும்பு)

பொது மக்களுடன் அரசியல் உடன்பாட்டை ஏற்படுத்துவோர் மற்றும் தமது குடும்பம், நண்பர்கள், நெருங்கிய நட்பு சங்கங்களுடன் உடன்பாட்டை ஏற்படுத்துவோர் என இரண்டு தரப்பினர் அரசியல் துறையில் இருப்பதாக அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம, ரணகெலிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட சென விராஜகம என்ற புதிய கிராமத்தை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வில்நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். (ம-3)

# அச்சுவேலி தெற்கில் தாயையும் 6 வயது மகனையும் காணவில்லை

## பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தெற்கு பகுதியில் தாயும் மகனும் கடந்த 9 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக தெரவிக்கப்பட்டுள்ளது.

தம்பையா மகேந்திரன் என்பவருடைய மனைவியும், அவரது மகனுமே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போன தாய் 40 வயதுடைய, ஜேவர்தன் உமயாலோகனா என்றும், அவரது மகன் 6 வயதுடைய ஜேவர்தன் ஜோகலவன் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதே போன்று புறக்கோட்டையைச் சேர்ந்த நபரொருவரும் கடந்த 10 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காணாமல் போன நபர் 24 வயதுடையவர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

# மோ.சைக்கிள் மோதியதில் மாணவன் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா புகையிரத நிலைய வீதியில் பாடசாலை மாணவனை மோட்டார் சைக்கிள் மோதி தள்ளியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை இடம் பெற்ற இவ் விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

வவுனியா, புகையிரத நிலைய வீதியூடாக துவிச்சக்கர வண்டியில் பயணித்த மாணவன் பண்டாரிக்குளம் நோக்கி பாதையை ஊடறுத்து செல்ல முற்பட்ட சமயத்தில் புகையிரநிலைய வீதியூடாக குருமன்காடு நோக்கி அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியினை கடக்க முயன்ற துவிச்சக்கரவண்டியின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த மாணவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். (ம-250)

# அமிர்தலிங்கம், யோகேஸ்வரனின் 30 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமரர்கள் அ. அமிர்தலிங்கம், மற்றும் வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் 30 ஆவது நினைவு தினம் இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும். (5-7)

# பாவனையாளர் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக நேற்று மல்லாக நீதவான் நீதிமன்றத்தால் ஒரு இலட்சத்து 18ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

மல்லாக நீதவான் நீதிமன்றப் பகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் பாவனையாளர் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது பாவனையாளர் சட்டங்களை மீறும் வகையில் செயற்பட்ட 15 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கெதிராக தொடரப்பட்ட வழக்கில் குறித்த தொகை அபராதமாக விதிக்கப்பட்டது.(5-10)

❖❖❖❖❖❖❖❖

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் ஒன்பது ஆயிரத்து ரூபாய் அபராதம் விதித்தது.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பகுதிகளை உள்ளடக்கிய வர்த்தக நிலையங்கள் மீது பாவனையாளர் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 4 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களின் மீது தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் அபராதம் விதிக்கப்பட்டது. (5-10)

# அரச இசை,நடனப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தெரிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கான அரச இசை, நடனப் போட்டிகள் எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் நடைபெறும் என யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எஸ். கிருஷ்ண குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய கலாசாரத் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் கலை மன்றங்களை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்படும் குறித்த இசை,நடனப் போட்டிகள் யாழ். மாவட்டத்திலும் இடம் பெறவுள்ளது.

இதற்காக 42 நடனக் குழுக் களும் 117 இசை மன்றங்களைச் சேர்ந்தவர்களும் தெரிவு செய்ய ப்பட்டுள்ளனர்.

போட்டி இடம் பெறும் இடங்களாக இசைத்துறைக்கு மருதனார் மடச்சந்திக்கு அருகிலுள்ள வட இலங்கைச் சங்கீத சபை மண்டபமும், நடனப் போட்டிகளுக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும் மேற்குறித்த திகதிகளில் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ தனக்கென லட்சியத்தை வகுத்துக் கொண்டு, அதை அடைய இன்று முதல் வெற்றி பயணம் மேற்கொள்ளுங்கள்.

❖ நம் ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற சக்தியும், தூய்மையும், மகிழ்ச்சியும் குடி கொண்டிருக்கின்றன.

❖ மிகப் பெரிய உண்மை ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள். அது தான் வலிமையே வாழ்வு.

❖ உலகத்தைப் போல உங்கள் உள்ளமும் பரந்து விரிந்ததாக இருக்க வேண்டும்.

❖ தன்னை நெறிப்படுத்திக் கொண்டு வாழ்பவனே, உலகையும் நெறிப்படுத்தும் தகுதியைப் பெறுகிறான்.

# தோல்விக்கு பின் டோனியின் மனநிலை



உலகக் கோப்பை தொடரில் இருந்து இந்திய அணி வெளியேறிய நிலையில் டோனி எப்படி இருக்கிறார் என்பதை அறிய ரசிகர்கள் ஆவலுடன் இருக்கின்றனர்.


உலகக் கோப்பை முதல் அரையிறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணிக்கு எதிராக இந்திய அணி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது.

இறுதிவரை போராடிய டோனி, எதிர்பாராத விதமாக ரன் அவுட் ஆனார். டோனி அவுட் ஆகாமல் இருந்திருந்தால் போட்டியின் முடிவு மாறி இருக்கலாம். எனினும், அவுட் ஆன டோனி மிகவும் ஏமாற்றத்துடன் பெவிலியன் திரும்பினார்.

இந்நிலையில், சில தினங்களுக்குப் பிறகு இங்கிலாந்தில் இருந்து டோனி தனது சொந்த ஊரான ராஞ்சிக்கு செல்வார் என கூறப்பட்டுள்ளது.

தோல்விக்கு பின் டோனி எவ்வாறான மனநிலையில் இருக்கிறார் என்பது குறித்து அறிய ரசிகர்கள் ஆவலுடன் உள்ள நிலையில், இங்கிலாந்தில் மகிழ்ச்சியுடன் டோனி ரசிகர்களுடன் புகைப் படத்திற்கு போஸ் கொடுத்துள்ளார். தற்போது, குறித்த புகைப்படம் இணையத்தில் வைரலாகியுள்ளது. (க)

# ஓய்வு முடிவில் தலையிடாதீர் டோனி குறித்து சச்சின்



டோனியின் முடிவு என்னவாக இருந்தாலும் அதை நாம் மதித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டு ல்கர் தெரிவித்துள்ளார்.

உலகக்கோப்பை அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்திடம் தோல்வியடைந்தது.

ரசிகர்கள் பலர் டோனியை பாராட்டியும், 'அவரது ஓய்வு குறித்தும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வந்தனர். இந்நிலையில், டோனியின் ஓய்வு குறித்து இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், 'டோனி சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது அவரது தனிப்பட்ட விருப்பம். அதில் நாம் யாரும் தலையிடக் கூடாது. அவரின் முடிவு என்னவாக இருந்தாலும் அதை நாம் மதித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் அவர் முடிவு எடுக்கும் வரை நாம் காத்திருக்க வேண்டும்.

அத்துடன் இந்திய அணியில் டோனியின் பங்களிப்பு மிகவும் சிறப்பானது. அவரின் சிறப்பான ஆட்டத்திற்கு தான், அவருக்கு இவ்வளவு ஆதரவு கிடைத்துள்ளது. கிரிக்கெட் வரலாற்றில் எத்தனை பேருக்கு இவ்வளவு சிறப்பான கிரிக்கெட் பயணம் அமையும்? அத்தகைய சிறப்பை டோனி பெற்றுள்ளார். (க)

# துடுப்பாடும் போது கழுத்தை தாக்கிய பந்து சுருண்டு விழுந்து உயிரிழந்த இளம் வீரர்





கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கும் போது பந்து கழுத்தை தாக்கியதில் இளம் வீரர் உயிரிழந்தது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள பட்டான் பகுதியைச் சேர்ந்தவர் ஜஹாங்கிர் அகமது வார் (வயது-18).

இவர், அரசு சார்பில் அங்கு நடத்தப்பட்ட 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டியில் நேற்று பங்கேற்றார்.

அப்போது அகமது பட்டிங் செய்துகொண்டிருந்த போது, வேகமாக வந்த பந்து அவர் கழுத்தில் தாக்கியதில் அவர் சுருண்டு விழுந்தார்.

உடனடியாக, அங்கிருந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

இது குறித்து மருத்துவர் ரஹ்மான் கூறுகையில், ஷார்ட் பிட்ச் பந்தை அகமது அடிக்க முயன்ற போது அது அவர் கழுத்தைத் தாக்கியது.

இதையடுத்து அவர் சுய நினைவின்றி மயங்கி விழுந்து விட்டார், ஹெல்மெட் அணிந்திருந்தும் பந்து அவரை தாக்கியது தான் சோகம் என கூறியுள்ளார்.

# நியூசிலாந்து அணியைப் புகழ்ந்து பேசிய ஆனோல்ட்

உலகக்கோப்பை அரையிறுதியில் இந்திய அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ள நியூசிலாந்தை இலங்கை முன்னாள் வீரர் ரசல் ஆனோல்ட் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

இந்தியாவை வென்ற நியூசிலாந்து அணி உலகக்கோப்பை தொடரின் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

இந்நிலையில் சிறப்பாக செயற்பட்ட நியூசிலாந்துக்கு இலங்கை முன்னாள் வீரர் ரசல் ஆனோல்ட் பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

இது குறித்த ஆனோல்டின் டுவிட்டர் பதிவில், சிறப்பான பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பை கொண்ட அணி இறுதி போட்டிக்கு சென்றுள்ளது.

என்ன ஒரு அருமையான போட்டி! நியூசிலாந்து அணி எல்லாவற்றுக்கும் மேலானது என தனது டுவிட்டில் தெரிவித்துள்ளார். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## உலகக்கோப்பை தோல்வி எதிரொலி

# இந்திய அணியில் தமிழக வீரருக்கு இனி வாய்ப்பே இல்லை



உலகக்கோப்பை அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி தோல்வியை சந்தித்ததால், அந்தணியில் இனி தினேஷ் கார்த்திக் மற்றும் கீதர் ஜாதவ்விற்கு அணியில் இடம் கிடைக்க வாய்ப்பே இல்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை தொடரில், இந்திய அணி அரையிறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததன் எதிரொலியாக மிடில் ஆர்டரில் மிகப் பெரிய மாற்றத்தை கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த உலகக்கோப்பை தொடருக்காக இந்திய அணியை கடந்த 2 ஆண்டுகளாக பிசிசிஐ சுழற்சி முறையில் வீரர்களை தேர்வு செய்து இங்கிலாந்திற்கு அனுப்பியது.

ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பின் படி மிடில் ஆர்டர் துடுப்பாட்டக்காரர்கள் குறிப்பாக அரையிறுதிப் போட்டியில் சொதப்பியதால், தினேஷ் கார்த்திக் மற்றும் கீதர் ஜாதவ் ஆகியோரை அணியிலிருந்து ஓரங்கட்டிவிட்டு, அவர்களுக்கு பதிலாக வேறு சில வீரர்களை இனி ஆட வைக்க பிசிசிஐ முடிவு செய்துள்ளதாகவும், இனிமேல் தினேஷ் கார்த்திக் மற்றும் ஜாதவ் ஒரு நாள் போட்டி தொடருக்கான அணியில் இடம்பெற வாய்ப்பே இல்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தச் சேர்ந்த தினேஷ் கார்த்திக் இந்திய அணிக்கு பல போட்டிகளில் வெற்றிக்கு முக்கிய நபராக இருந்துள்ளார், ஆனால் இங்கிலாந்து மைதானத்தில் தினேஷ் கார்த்திக்கின் ஆட்டம் அணி நிர்வாகத்திற்கு திருப்தி அளிக்காததால், வெளிநாட்டு தொடர்களிலும் சிறப்பாக விளையாடும் வீரர்களை பிசிசிஐ சல்லடை போட்டு தேடிவருகிறது. (க)

# இந்தியாவை வெல்லும் அணி உலகக் கோப்பையை வெல்லும்

## முன்பே கணித்த வீரர்

உலகக்கோப்பை தொடரில் இந்திய அணியை ஜெயிக்கும் அணி கோப்பையை வெல்லும் என மைக்கேல் வோகன் கடந்த மாதம் கணித்திருந்த நிலையில் அது பாதி உண்மை என உறுதியாகியுள்ளது.

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மைக்கேல் வோகன் கடந்த மாதம் ஒரு பேட்டி கொடுத்திருந்தார்.

அப்போது, இந்திய அணியை உலகக்கோப்பை தொடரில் எந்த அணி ஜெயிக்கிறதோ அந்த அணி தான் கோப்பையை வெல்லும் எனக்கூறினார், அதே போல இங்கிலாந்து அணி கோப்பையை வெல்ல அதிக வாய்ப்புள்ளதாகவும் கூறியிருந்தார்.

இந்நிலையில் உலகக் கோப்பை தொடர் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டது.

இத்தொடரில் இந்தியாவை இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் மட்டுமே வீழ்த்தியுள்ளன.

லீக் ஆட்டத்தில் இங்கிலாந்தும், அரையிறுதியில் நியூசிலாந்தும் இந்தியாவை வீழ்த்தின. இந்த சூழலில் இங்கிலாந்தும், நியூசிலாந்தும் தான் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

ஆகவே இந்தியாவை வீழ்த்தும் அணி உலகக் கோப்பையை வெல்லும் என வோகன் கூறியது உண்மையாகவுள்ளது.

ஏனெனில் இந்த இரு அணிகளும் இந்தியாவை வீழ்த்தியுள்ள நிலையில் அதில் ஒன்று தான் உலகக் கோப்பையை வெல்லவுள்ளது. (க)

## தமிழ் மக்களின்...

வரும் இன, மத பேதமின்றி ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என்று சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

அருண் பிரசாத் அறக்கட்டளையின் தலைவர் எம்.மாணிக்கவாசகத்தினால் அருண் மாணிக்கவாசகம் இந்து தேசிய பாடசாலைக்கான காணி கல்வி அமைச்சிடம் கையளிக்கப்படுதலும் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் அப்பாடசாலைக்கு வழங்கப்படும் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நேற்று அருண் மாணிக்கவாசகம் இந்து தேசிய பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

## யாழில் மூவர்...

வர்கள் என தெரியவந்துள்ளது.

வர்த்தக நிலையமொன்றில் இரண்டு ஐயாயிரம் ரூபாய் நாணயத்தாள்களைக் கொடுத்து குறித்த நபர்கள் பொருள்கள் வாங்கிய வேளை அவை போலி நாணயத்தாள் என சந்தேகப்பட்ட வர்த்தகர், பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதையடுத்து வர்த்தக நிலையத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர். (ம-3)

## எனக்குத் தெரி...

தெரிவுக்குழு முன்னிலையில் ஆஜராகி தனக்கு தெரிந்த விடயங்களை தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தெரிவுக்குழு சம்பந்தமாக பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும், அது சட்டரீதியானது என்று நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆகவே தெரிவுக்குழு ஊடாக நாம் உண்மையை கண்டறிந்து கொள்வதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (ம-3)

## கடும் வறட்சி...

அத்துடன், நாடளாவிய ரீதியில் கடும் வறட்சி காரணமாக 17 மாவட்டங்களைச் சேர்ந்த 565,173 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 156,994 பேர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு குடிநீரை விநியோகிப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# திருக்கேதீஸ்வரம் தொடர்பான பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

(மன்னார்)

திருக்கேதீஸ்வர ஆலய வீதி வளைவு அமைப்பது தொடர்பான சர்ச்சைக்கு தீர்வு காண்பதற்காக இன்று சனிக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில், அனைத்து தரப்பினரும் கலந்துகொள்ளும் கலந்துரையாடல், அமைச்சர் மனோ கணேசனின் பணிப்புரையின் பேரில் மன்னார் மாவட்ட செயலாளரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு இரு தரப்பு மத தலைவர்கள், ஆலய பிரதிநிதிகள், மாவட்ட எம்.பிக்கள், அரச அதிகாரிகள், பிரதேச சபை தலைவர் உட்பட அனைத்து தரப்பினரும் அழைக்கப்பட்டு இருந்தனர்.

இந்நிலையில் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காக மன்னார் ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ வெளிநாடு சென்றுள்ள காரணத்தால், நடைபெற இருந்த கலந்துரையாடலை பிறிதொரு தினத்துக்கு ஒத்தி வைக்கும்படி வன்னி மாவட்ட எம்.பிக்கள் செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர், அமைச்சர் மனோ கணேசனிடம் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் மனோ, நடைபெற இருந்த கலந்துரையாடலை ஒத்தி வைத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி-தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சருமான மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது.

மன்னார் ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ கலந்து கொள்ளாமல், இந்த பேச்சுவார்த்தை ஒரு போதும் பலனளிக்க போவதில்லை.

ஆகவே அவர் வரும் வரை பேச்சுவார்த்தையை ஒத்தி வைக்கும்படி எம்.பிக்கள் விடுத்துள்ள கோரிக்கையில் நியாயம் இருப்பதாக நினைக்கின்றேன். இந்த பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற எண்ணப்பாடு தமக்கும் இருப்பதாக அவர்கள் என்னிடம் தெரிவித்துள்ளார்கள்.

தமிழர்கள் மத அடிப்படையில், இந்து, கத்தோலிக்கர் என்ற அடிப்படையில் பிரிவதற்கு இடம் கொடாமல் நாம் செயற்பட வேண்டும் என அவர்களுக்கு நான் கூறினேன். அத்துடன் ஆயர் நாடு திரும்பிய உடன், கலந்துரையாடலை கூடிய விரைவில் நடத்த புதிய திகதிகளை பெற்று தரும்படி அவர்களிடம் நான் கூறியுள்ளேன்.

கட்டாயமாக, ஆயரிடம் பேசி புதிய திகதிகளை பெற்று தருவதாக வன்னி மாவட்ட எம்.பிக்கள் செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் இருவரும் என்னிடம் உறுதியளித்துள்ளனர். (ம-3)

## கூட்டமைப்பு...

தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், 'தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு அரசாங்கம் இதுவரையில் எவ்வித தீர்வையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டும் கூட்டமைப்பினர் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சியை பாதுகாப்பதால் எவ்வித பயனும் ஏற்படாது.

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கம் கூட்டமைப்பினரிடம் கிடையாது. எதிர்க்கட்சியினர் என்று குறிப்பிட்டுக் கொண்டு கடந்த நான்கு வருட காலமாக அரசாங்கத்தின் அனைத்து வரப்பிரசாதங்களையும் இவர்கள் பெற்று தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்துள்ளார்கள்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு கூட்டமைப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும் தொடர்ந்து ஆதரவு வழங்குவது அவர்களின் தனிப்பட்ட தீர்மானமாகும். எதிர்க்கட்சியினர் என்று குறிப்பிட்டுக் கொள்வதால் பதவி நிலையின் பொறுப்புக்கள் அவமதிக்கப்படுகின்றது.

ஆகவே இவ்விரு தரப்பினரும் குறுகிய காலத்திற்கு அரசாங்கத்தின் அமைச்சு பதவிகளை பெற்றுக் கொண்டு முழுமையாக அரசாங்கத்திற்கு சார்பாகவே செயற்படலாம். அதுவே சிறப்பாக அமையும் என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## இலங்கை அரசு மீது இந்தியா...

இந்திய மத்திய அரசாங்கத்தின் முக்கிய அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி, எக்கனமிக் டைம்ஸ் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

எக்சா மற்றும் சோஃபா உடன்படிக்கைகளில் இலங்கை கைச்சாத்திடவிருப்பதாக பொது எதிரணி குற்றம் சுமத்தி வருகிறது. எனினும் அவ்வாறான உடன்படிக்கை எதுவும் இன்னும் கைச்சாத்தாகவில்லை என்று பிரதமர் ரணில் அறிவித்துள்ளார்.

அதேநேரம் இலங்கையின் இறைமையை பாதிக்கின்ற எந்த உடன்படிக்கையும் தமது ஆட்சிக் காலத்தில் கைச்சாத்தாகாது என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் மேற்கொள்ளும் தீர்மானம் தொடர்பாக இந்திய அரசாங்கம் அவதானத்துடன் இருக்கிறது.

அண்டைய நாடு என்ற அடிப்படையில், இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம் தமக்கு முக்கியமானதாக அமையும் என்று இந்தியா கருதுவதாகவும் குறித்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பிரேரணை வெற்...

கடந்த வருடம் ஒக்டோபரில் அரசியலமைப்பு நெருக்கடியின் போதும் விட்டுவிடாமல் போராடி நியாயம் பெற்று நாங்கள் ஆட்சியமைத்ததை மறக்கக் கூடாது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார். (ம-3)

## 6 இந்திய மீன...

தாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி கச்சதீவுக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 3000க்கும் அதிகமான தமிழக மீனவர்கள் எச்சரித்து அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ம-3)

## நாவற்குழியில் அமைக்கப்பட்ட...

அதற்கான ஏற்பாட்டு ஊர்வலமும் யாழ்ப்பாணத்தினை நோக்கி வந்துகொண்டிருக்கின்றது.

2010ஆம் ஆண்டு முதன் முதலாக மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நாவற்குழிப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் 45 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. பின்னர் 2015 ஆம் ஆண்டு 48 சிங்களக் குடும்பங்களுக்கு நாவற்குழிப் பிரதேசத்தில் காணி அனுமதிப்பத்திரம் மைத்திரி - ரணில் அரசால் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் 2018ஆம் ஆண்டு விகாரை ஒன்றைக் கட்டுவதற்காக காணி ஒதுக்கப்புட்டு, கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அதற்கெதிராக சாவகச்சேரிப் பிரதேச சபை, சாவகச்சேரி நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தது.

காணி உறுதிப்பத்திரங்கள் உள்ளிட்ட உரிய ஆவணங்கள் எதுவுமின்றி விகாரை கட்டப்படுவதாகக் குற்றம் சுமத்தி, சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். இதனால் விகாரையைத் தொடர்ந்து கட்டுவதற்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் அப்போதைய நீதிபதி சிறிநிதி நந்தசேனன் இடைக்காலத் தடை உத்தரவொன்றைப் பிறப்பித்திருந்தார்.

ஆனால் சென்ற ஆண்டு ஆவணி மாதம் 30ஆம் திகதி உரிய ஆவணங்கள் சாவகச்சேரி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. விகாரை கட்டப்படும் காணி இலங்கைத் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குரியது என்பதால் அந்தக் காணியில் விகாரை கட்டுவதற்கு கொழும்பில் உள்ள வீடமைப்பு அதிகார சபையின் உயர் அதிகாரிகள் அனுமதி வழங்கிய கடிதம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனால் விகாரை கட்டுவதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவு நீக்கப்பட்டது. சாவகச்சேரி பிரதேச சபையும் தமது மனுவை மீளப் பெற்றுக் கொண்டது. அத்துடன் சென்ற ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி விகாரையைக் கட்டுவதற்கான அனுமதியையும் சாவகச்சேரி பிரதேச சபை வழங்கியது.

இந்த நிலையில் நாவற்குழியில் அமைக்கப்பட்ட விகாரை சம்புத்தி சுமன விகாரை என்ற பெயரில் இன்று இரவு திறந்துவைக்கப்படுகிறது. (ம-3)

## பூஜித மற்றும் ஹேமசிறி சார்பில்...

எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதற்கமைய, எதிர்வரும் 25 ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளில் குறித்த மனுக்கள் மீதான விசாரணை தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.

இதேவேளை, நேற்று குறித்த மனுக்கள் மீதான விசாரணைகள் இடம்பெற்றபோது சட்டமா அதிபர் தப்புல டீ லிவேரா, தனிப்பட்ட முறையில் நீதிமன்றில் முன்னிலையானார்.

இதன்போது மனுவில் முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் சார்பில், சட்டமா அதிபர் திணைக்களம் முன்னிலையாகாது என, சட்டமா அதிபர் நேற்று நீதிமன்றிற்கு அறிவித்தார்.

எனினும், ஏனைய பிரதிவாதிகளான சட்டமா அதிபர் மற்றும் விசேட பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பீ.திஸாநாயக்க ஆகிய பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையாவதாக சட்டமா அதிபர் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், குறித்த மனுக்கள் தொடர்பில், சில பிரதிவாதிகளின் எதிர்ப்புக்கள் நேற்று முன்தினம் தமக்கு கிடைக்கப்பெற்றதாகவும் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த பிரதம நீதியரசர் தலைமையிலான ஏழு நீதியரசர்கள் கொண்ட ஆயம், மனு தொடர்பில் எதிர்ப்புக்கள் இருக்குமாயின் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை அதனை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

இதேநேரம், குறித்த எதிர்ப்புக்கான எதிர்ப்புக்களை எதிர்வரும் 23 ஆம் திகதி தாக்கல் செய்யுமாறும் நீதியரசர்கள் குழாம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ம-3)

### மஹஜன சம்பத

திகதி 2019/07/12
சீட்டிழுப்பு இலக்கம் 3958
ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 0 0 5 4 9
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி 2019-07-12
சீட்டிழுப்பு இலக்கம் 173
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 03 47 51 60
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2019.07.12
சீட்டிழுப்பு இலக்கம் 2176
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 06 22 41 74
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 12/07/2019
சீட்டிழுப்பு இலக்கம் 405
வெற்றி எழுத்து R
சுப்பர் இலக்க 10
வெற்றி இலக்கங்கள் 20 43 54 57

## சஹ்ரானுடன் பயிற்சி பெற்ற...

ரான் ஹாசிமுடன் ஆயுதப் பயிற்சி பெற்ற மற்றொரு சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

பயங்கரவாத தடுப்பு பிரிவு அதிகாரிகளால் சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

20வயதானதாஜுதீன் அஹமட் என்ற சந்தேக நபரே மகரகம பிரதேசத்தில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளார். கடற்படை புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர குறிப் பிட்டுள்ளார்.

கைது செய்யப் பட்டுள்ள சந்தேக நபரிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் இதன்போது தெரி வித்துள்ளார். (ம-3)

### பாராளுமன்றம்...

மையின் காரணமாக பாராளுமன்ற சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம-3)

### சிகரட் விலை...

இந்த வரி அதிகரிப்பு வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியானது.

இந்த நிலையிலேயே சிகரட்டின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-3)


**யாழ் நகரில் உள்ள பிரபல்யமான**

இலத்திரனியல் காட்சியறைக்கு வேலையாட்கள் தேவை
வயது 18 - 45
அடிப்படை சம்பளம் 21,000/=
ஆர்வம் உள்ளவர்கள் பழகவிரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**021 222 3530, 070 304 3636** (9575)

**துரித தபால்கள் பொதிகள் சேவை**

DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள் 3 வேலை நாட்களில் ஒப்படைக் கப்படும்
**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
**0777 554 528** (CB

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (9562)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
**af பிரெஞ்சு மொழி**




- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.**www.ambafrance-lk.org** (9552)

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்


## ஈரவிழிகளுடன் ஓராண்டு நிறைவு நினைவுநாள்

### அமரர் மருதை.கிருஸ்ணசாமி



இதயம் ஒருபோதும் வார்த்தைகள் தராது,
மௌனத்தை மட்டுமே மொழியாகக் கொண்டு
வாழ்ந்து எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வமே
ஆண்டொன்று கடந்தாலும் ஈரவிழிகளுடன் ஓரிரு
வார்த்தைகள் கூட பகிர்ந்து கொள்ள முடியாத
சோகத்துடன் உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்தித்து என்றும்
உங்கள் நினைவுடன்.



கடந்த 08.07.2018 அன்று எமை விட்டு பிரிந்த இதய தீபத்தின் 1ஆம் ஆண்டு நிறைவு நினைவு நாள் 14.07.2019 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் கலந்து கொண்டு பிரார்த்திப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கற்சிலைமடு,
4ஆம் கண்டம். (C-6938)

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமக்கள்,


**பணியாளர்கள் தேவை**

**வரவேற்பாளர்** பெண்
**வடிவமைப்பாளர்** ஆண்/பெண்

அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

**SMART** DIGITAL PRINTING (9532)
#255, Stanley Road, Jaffna.
Tel : 021 221 2958, Mob : 07 1650 1650,
e.mail : smartjaffna@gmail.com
MUG, BANNER, OFFSET, SCREEN PRINTING

**அறைகள் வாடகைக்கு**

திண்ணைவேலி சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் கூடிய இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு.
குறிப்பு : பெண்கள் விரும்பத்தக்கது.
**தொடர்பு : 077 985 7528** (9540)

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
**எமரல்ட் ஐல்**
License No. 2268
முற்றிலும் இலவசமாகத் தரும்
சவுதி அரேபிய வேலைவாய்ப்பு



**குழாய் பொருத்துநர்**
சம்பளம் ரூ.56,400 + OT
வயதெல்லை 21 – 35
ஒரளவு பிளம்பிங், எலைக்ரீஷியன் A/C டெக்னீஷியன், அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் (C-6934)
**இலவசம்**
விசா, டிக்கட், பியூறோ கட்டணம்
உணவு, தங்குமிடம், மருத்துவம், சலவை
ஒவ்வொரு வருடமும் நாடு வந்து திரும்புவதற்கான விமானச்சீட்டு
(21 நாள் சம்பளத்துடனான விடுமுறையுடன்)
077 00 38 215, 0777 324 004, 021 221 9 221
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lover/Teen Girls க்கு அருகே
email jaffna@emeraldisle.lk www.emeraldisle.lk

**பணியாளர்கள் தேவை**

யாழ் மாவட்டத்தில் சேவையாற்ற CCTV பணியாளர்கள் தேவை. தொடர்புகளுக்கு :
(C-6956) **076 989 9977**

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg (C-6918)
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

**BCHS**
நீங்கள் Canada வில் கல்வி கற்க ஆர்வமுடையவரா?
Canada student visa
No 15 2/1, Off Stanley road,
Sirambiyadi lane, Jaffna
Call: 0212224550 / 0761380212 (C-6917)

**ஆசிரியர் தேவை**

பிரபல தனியார் கல்வி நிலையத்திற்கு அனுபவமிக்க ஆசிரியர்கள் தேவை.
**தரம் 06 – 11 வரை**
பாடங்கள் : கணிதம், விஞ்ஞானம், சிங்களம், ICT
இடங்கள் : விசுவமடு ,மல்லாகம்
(இரு இடங்களுக்கும் அருகே இருப்பவர்கள்)
**தொடர்புகளுக்கு:**
**077 448 8222** (9494)

**Techno World**
**தொழில்நுட்பக் கல்லூரி**
வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

**A/L 2019**

பழைய, புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கான
**விஷேட செயலமர்வு**

ஆரம்பம் காலை 09.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 12,13,14 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 15,16 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 19,20,21 | I.C.T விவசாயம், புவியியல், ஊடகக்கல்வி, சித்திரம், இலகுகணிதம் |

(C-6947)

குறிப்பு
- பாடங்கள் ஒவ்வொன்றும் அலகுரீதியாக தெளிவுபடுத்தப்படும்.
- எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய மாதிரி.
- வினாத்தாள்களும் அதற்குரிய விடைகளும், விளக்கங்களும் வழங்கப்படும்.
- முற்பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கே கையேடுகள் வழங்கப்படும்.

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்
**அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்**
**தொடர்புகளுக்கு : 077 01 75 346**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.